விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 216 வள்ளுவர் ஆண்டு 2055 ஆடி 06 திங்கட்கிழமை (22.07.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

## எமது தனித்துவத்தை ஏற்கும் அரசியல் யாப்புத் தேவை

### கட்சி மாநாட்டில் சி.வி.விக்னேஸ்வரன்

(யாழ்ப்பாணம்)

எம்முடைய இன்றைய அவலம் ஒற்றையாட்சி அரசியல் யாப்பு மூலம் வந்ததே என்பதை எமது தமிழ் மக்கள் ஆழ உணர வேண்டும் என்பதுடன், எமது தனித்துவத்தை ஏற்கும் ஒரு அரசியல் யாப்பும் உதயமாக வேண்டும் என தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற 15

## செப்ரெம்பர் மாதத்திலேயே ஜனாதிபதித் தேர்தல்

### தென்னிலங்கை ஊடகம் செய்தி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தல் எதிர்வரும் செப்ரெம்பர் 21ஆம் திகதி நடைபெறலாம் என தென்னிலங்கை ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதித் தேர்தலிற்கான வேட்பு மனுக்கள் ஒகஸ்ட் மாத நடுப்பகுதியில் ஏற்றுக் கொள்ளப்படும் என்றும், உறுதியான திகதி இந்த வாரம் வெளியாகும் எனவும் 15



### தமிழ்க் கட்சிகளிடமிருந்து அந்நியப்பட்டுள்ளது

# தமிழர்களின் உரிமை அரசியலை சலுகை அரசியல் வென்றுள்ளது

### ஒன்றுபட்டு பயணிப்பதே ஒரே வழி
### த.ம.கூட்டணியின் மாநாட்டில் சிறீதரன் எம்.பி முழக்கம்

*(யாழ்ப்பாணம்)* தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் இன்று மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கின்றன. இந்த நிலைமையைச் சீர் செய்ய தமிழ்த் தேசிய அரசியல் மறுசீரமைப்பு முயற்சிகளை விரைவுபடுத்த வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

## 22ஆவது திருத்தம் தேர்தலைப் பாதிக்காது

### கல்வி அமைச்சர் திட்டவட்டம்

(கொழும்பு)

22ஆவது அரசியலமைப்புத் திருத்தப் பிரேரணையால் ஜனாதிபதித் தேர்தலுக்கு எதுவித பாதிப்பும் ஏற்படாது எனக் கல்வி அமைச்சரும் பாராளுமன்ற அவைத் தலைவருமான சுசில் பிரேமஜயந்த தெரிவித்தார். 15



## கறுப்பு ஜூலை நினைவேந்தல் நாளை



## மானிப்பாய் இளைஞனை கொழும்பில் காணவில்லை

(கொழும்பு)

கொழும்பில் வேலை செய்து கொண்டிருந்த இளைஞனைக் காணவில்லை என மானிப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மானிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த இளைஞன் ஒருவர் கொழும்பில் பணியாற்றி வந்துள்ளார். விடு முறைகளின்போது அவர் யாழ்ப்பாணத்திற்கு வந்து சென்றுள்ளார்.

இந்நிலையில் கடந்த ஒரு வார காலத்திற்கு 15

### புளியங்கூடல் ஆலயத்தில்

## களவாடப்பட்ட நகைகள் மீட்பு

### ஆலய உதவியாளர் கைது

(ஊர்காவற்றுறை)

புளியங்கூடல் முத்து விநாயகர் ஆலயத்தில் களவு போன நகைகளில் ஒரு பகுதி பொலிஸாரால் 15



## தமிழ்ப் பொது வேட்பாளர் உடன்படிக்கை இன்று


(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கை இன்று மதியம் 12 மணியளவில் யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் கைச்சாத்திடப்படவுள்ளது.

இதையொட்டி ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் விசேட கலந்துரையாடல் நேற்று சுன்னாகம் கந்தரோடைப் பகுதியில் உள்ள புளொட் அலுவலகத்தில் பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங் 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்



வரலாற்றுச் சிறப்பு மிக்க கதிர்காம கந்தன் ஆலய வருடாந்த உற்சவந்தனில் நேற்று இரவு மகா பெரஹரா உற்சவம் இடம்பெற்றது. ஆலயத்தின் மகோற்சவமானது கடந்த 6 ம் திகதி ஆரம்பமாகிய நிலையில் நேற்றைய தினம் இறுதிப் பெரஹரா வெகு விமர்சையாக இடம்பெற்றது.

# ஆசிரியர் தாக்கினார்; மாணவன் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

ஒப்படை சமர்ப்பிக்கத் தவறியதால் தன்னை ஆசிரியர் ஒருவர் மூர்க்கத் தனமாக தாக்கினார் என மாணவன் ஒருவன் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளான்.

கோப்பாய்ப் பகுதியில் உள்ள பாடசாலை ஒன்றில் கற்கும் மாணவனே இவ்வாறு முறைப்பாடு செய்துள்ளார்.

பாடம் ஒன்றிற்கான ஒப்படையை சமர்ப்பிக்கத் தவறியமையால் ஆசிரியர் தன்னைத் தாக்கியதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை கோப்பாய் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ந-7)

# நடவடிக்கை இல்லையேல் உண்ணாவிரதப் போராட்டம்

## மருத்துவர் அர்ச்சுனாவின் அடுத்த கணை



(கொழும்பு)

சுகாதார அமைச்சினால் உரிய நடவடிக்கை எடுக்கப்படாவிடின் நல்லூரில் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொள்வோம் என சாவகச்சேரி வைத்தியசாலையின் முன்னாள் பதில் வைத்திய அத்தியட்சகர் இராமநாதன் அர்ச்சுனா தெரிவித்துள்ளார்.


இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில்,

எதிர்வரும் 25ஆம் திகதிக்கு முன் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் குற்றம் சுமத்தப்பட்டுள்ள வைத்திய நிர்வாகிகள் குறித்து சுகாதார அமைச்சு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இல்லையேல், 25ஆம் திகதி காலை நல்லூரில் உண்ணாவிரதப் போராட்டம் முன்னெடுக்கப்படும்.

இது மக்கள் போராட்டமாக மாறும். இது வரலாறாக மாறும். மேலும், இந்த போராட்டத்தில் தன்னையே அர்ப்பணித்து ஆகுதியாக மாறவும் நான் தயார் என மருத்துவர் அர்ச்சுனா தெரிவித்துள்ளார். (ந-7)


# தசாக கிருகயக்ஞ அழைப்பு



தோற்றம் 17 - 06 - 1948

மறைவு 09 - 07 - 2024

நிகழும் குரோதி வருடம் ஆனிமாதம் 25 ம் நாள் (09.07.2024) செவ்வாய்க்கிழமை வைகுண்ட பதமெய்திய எமது குடும்பத் தலைவர்

## பிரம்மஸ்ரீ கணபதிசாமிக்குரு சுதர்சனக்குரு

(பிரதமகுரு ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் சுவாமி கோவில்)

அன்னாரது ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வு இன்று 22.07.2024 திங்கட்கிழமை பகல் 11.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்ப சகிதம் வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சிவன் கோவிலடி,
ஆவரங்கால்.

(C-0838)

இங்ஙனம்
குடும்பத்தினர்


# கள்ளமண்ணை வீதியில் கொட்டியதால் ஆபத்து

## அகற்றுமாறு பொதுமக்கள் கோரிக்கை

(யாழ்ப்பாணம் )

யாழ்ப்பாணம் அரியாலை சந்தி, ஏ-9 வீதியில் நீண்ட தூரத்துக்கு மண் கொட்டப்பட்டு காணப்படுவதால் மிகுந்த சிரமத்தின் மத்தியிலும் பயத்தின் மத்தியிலும் பயண த்தை மேற்கொள்ள வேண்டியுள்ளதாகப் பொதுமக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து மேலும் தெரியவருகையில்,

நேற்று முன்தினம் இரவு முதல் குறித்த வீதியில் மண் கொட்டப்பட்டு காணப்படுகின்றது. மண் கடத்தல்காரர்களைப் பொலிஸார் துரத்தியவேளை அவர்கள் வீதியில் மண்ணைக் கொட்டிவிட்டு சென்றிருக்கலாம் என சந்தேகிக்கப்படுகிறது.

குறித்த வீதியில் வளைவு காணப்படுவதுடன் அந்தவளைவில் ஏற்கனவே விபத்துக்கள் இடம்பெற்றும் உள்ளன.

இந்நிலையில் கொட்டப்பட்டுள்ள மண்ணினால் மேலும் விபத்துக்கள் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் அதிகம் உள்ளது என்பதுடன், இதனால் மரணம் கூட சம்ப விக்கக்கூடும் என மக்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

குறித்த மண்ணை அகற்றுவதற்கு சம்பந்தப்பட்ட தரப்பினர் இதுவரை எந்தவிதமான நடவடிக்கைகளையும் எடுக்க வில்லை எனவும் சுட்டிக்காட்டிய பொது மக்கள் குறித்த மண்ணை வீதியில் இருந்து அகற்றி பாதுகாப்பான போக் குவரத்துக்கு வழிசமைக்கு மாறு கோரிக்கை விடுத்துள்ளனர். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள், அதிபர்கள் இன்று முதல் இரு வாரங்கள் சட்டப்படி கடமையில்!

(கொழும்பு)

**சம்பள முரண்பாட்டுக்கு தீர்வு கோரி ஆசிரியர் மற்றும் அதிபர்கள் இன்று திங்கட்கிழமை முதல் இரு வாரங்களுக்கு சட்டப்படி கடமையில் ஈடுபட தீர்மானித்துள்ளனர்.**



இக்காலப்பகுதியில் சாதகமான பதிலை வழங்காவிடின் தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதாகவும் தொழிற்சங்கத்தினர் கல்வி அமைச்சுக்கு அறிவித்துள்ளனர்.

ஆசிரியர் மற்றும் அதிபர் சேவையில் நிலவும் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு கோரி ஆசிரியர், அதிபர் தொழிற் சங்கத்தினருக்கும், நிதியமைச்சின் செயலாளர், கல்வி அமைச்சர், ஜனாதிபதி செயலாளர் ஆகியோருக்கு இடையிலான சந்திப்பு நேற்று முன்தினம் சனிக்கிழமை ஜனாதிபதி செயலகத்தில் இடம்பெற்றது.

இந்த சந்திப்பு தொடர்பில் இலங்கை ஆசிரியர் - அதிபர் சேவை சங்கத்தின் செயலாளர் மஹிந்த ஜயசிங்க குறிப்பிட்டதாவது,

ஜனாதிபதியின் செயலாளர் தலைமையில் இடம் பெற்ற பேச்சுவார்த்தையில் சாதகமான தீர்மானம் கிடைக்கவில்லை.

ஆகவே திங்கட்கிழமை முதல் ஆசிரியர் மற்றும் அதிபர்கள் இரண்டு வாரங்களுக்கு சட்டப்படி கடமையில் ஈடுபடுவார்கள். இவ் இரு வாரங்களுக்குள் சாதகமான தீர்வினை வழங்காவிடின் தொடர் பணிப் புறக்கணிப்பில் ஈடுபடுவதற்கு தீர்மானிப்போம்.

முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கைகளுக்கு தீர்வு பெற்றுக் கொடுக்கும் நோக்கம் அரசாங்கத்திடம் கிடையாது. மாறாக, போராட்டத்தில் ஈடுபடும் தொழிற்சங்கத்தினரை முடக்கும் வகையில் அரசாங்கம் செயற்படுகிறது.

ஆசிரியர், அதிபர் சேவையில் நிலவும் சம்பள முரண்பாட்டுக்குத் தீர்வு காண்பதற்கு அரசாங்கம் நியமித்த குழுக்கள் அறிக்கை சமர்ப்பித்துள்ளன. அந்த அறிக்கையின் உள்ளடக்கத்தை செயற்படுத்துமாறு தொடர்ந்து வலியுறுத்துகிறோம் என அவர் தெரிவித்தார். (நி)

## எண்ணெய் விலையில் வீழ்ச்சி


(கொழும்பு)

சர்வதேச சந்தையில் மசகு எண்ணெயின் விலை இன்றைய தினம் சற்று வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

உலக சந்தையில் WTI ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 80.13 அமெரிக்க டொலராக வீழ்ச்சியைப் பதிவு செய்துள்ளது.

அத்துடன் பிரெண்ட் ரக மசகு எண்ணெய் பீப்பாய் ஒன்றின் விலை 82.67 அமெரிக்க டொலராக நிலவுகிறது.

இதேவேளை சர்வதேச சந்தையில் இயற்கை எரிவாயுவின் விலை 2.12 அமெரிக்க டொலராக அதிகரிப்பைப் பதிவு செய்துள்ளது. (நி)



## 'அஸ்வெசும' நலன்புரித்திட்டத்திற்கு 450,000 புதிய விண்ணப்பதாரர்கள்

(கொழும்பு)

அஸ்வெசும நலன்புரி திட்டத்திற்காக சுமார் 450,000 புதிய விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்துள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

அவற்றை ஆராய்ந்த பின்னர் அதற்கான குழுவினால் விண்ணப்பதாரர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர்.

கணக்கெடுப்பு பணிகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், வடமாகாணத்தில் அது வெற்றிகரமாக மேற்கொள்ளப்பட்ட போதிலும்,ஏனைய மாகாணங்களில் அதிகாரிகள் தரப்பில் சில தயக்கம் காணப்படுவதாகவும் நலன்புரி நன்மைகள் சபையின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

தற்போது முதற்கட்ட நிவாரணத்தின் கீழ் சுமார் 18 இலட்சம் பயனாளிகளுக்கு கொடுப்பனவுகள் வழங்கப்படுவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நன்மை 4 வகைகளின் கீழ் வழங்கப்படுவதுடன் இடைநிலை மற்றும் பாதிக்கப்படக்கூடிய பிரிவினருக்கு மாதாந்திர கொடுப்பனவாக 5,000 ரூபாய் வழங்கப்படுகிறது.

அஸ்வெசும இரண்டாம் கட்ட பணிகள் முடிவடைந்தவுடன், முதல் கட்டமாக அஸ்வெசும பெறும் பயனாளிகளின் தரவுகள் உடனடியாகப் புதுப்பிக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபையின் பேச்சாளர் ஒருவர் மேலும் தெரிவித்தார். (நி)

## பல்கலைக்கழகக் கட்டமைப்பிற்குள் உள்ள அரசியல் ஒழிக்கப்பட வேண்டும்

### ஜனாதிபதி ரணில் வலியுறுத்து



(கொழும்பு)

பல்கலைக்கழகக் கட்டமைப்பிற்குள் அச்சுறுத்தல் அரசியலை இல்லாதொழிக்க வேண்டும் எனவும், மாணவர்கள் சுதந்திரமாக கல்வி கற்க வேண்டுமானால் பல்கலைக் கழக முறைமையை மறுசீரமைக்க வேண்டும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அத்தோடு நாட்டின் பாடசாலைகள் மற்றும் பல்கலைக் கழகங்களைச் சீர்குலைக்காமல் முறையான கல்வி நிறுவனங்களாக மாற்றுவதற்கான காலம் வந்துள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.


மட்டக்களப்பு பூனானையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள சர்வதேச விஞ்ஞான மற்றும் தொழில்நுட்பப் பல்கலைக் கழகத்தை மாணவர்களிடம் உத்தியோகபூர்வமாக கையளித்த பின்னர் உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

அன்று இருந்தது போன்று இன்று பல்கலைக் கழகங்கள் இல்லை என்பதுடன் இன்று பல்கலைக் கழகங்களில் மாணவர்களின் கல்வியை சீர்குலைக்கும் குழுக்கள் உள்ளதாகவும் அந்தக் குழுக்கள் ஒரு சர்வாதிகாரத்தைப் போல மாணவர்களைக் கையாள்வதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பல்கலைக்கழகம் போன்ற கல்வி நிறுவனங்களை பட்டங்களை விற்கும் கடைகள் என்ற கேவலமான பேச்சுக்கு நாம் செவிசாய்க்கக் கூடாது எனவும் பிள்ளைகள் சுதந்திரமாக கல்வி கற்கும் வகையில் இந்நாட்டில் உள்ள பல்கலைக்கழக முறைமை மறுசீரமைக்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பல்கலைக்கழகக் கட்டமைப்பில் இருந்து அச்சுறுத்தும் அரசியலை அகற்ற வேண்டும் எனவும் பல்கலைக் கழகத்திற்குள் தங்களுக்கு விருப்பமான கற்கையைத் தேர்ந்தெடுக்கும் உரிமை மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் எனவும் ஜனாதிபதி குறிப்பிட்டுள்ளார். (நி)

## மீண்டும் முட்டை இறக்குமதி



(கொழும்பு)

முட்டையை இறக்குமதி செய்வது தொடர்பில் அரசாங்கம் மீண்டும் கவனம் செலுத்தியுள்ளது என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

உள்ளூர் சந்தையில் முட்டையின் விலை நாளுக்கு நாள் அதிகரித்துவருவதுடன், தற்போது முட்டை ஒன்று 49 ரூபாயிற்கும் 55 ரூபாயிற்கும் இடைப்பட்ட விலையில் விற்பனை செய்யப்படுகின்றது.

இதனைக் கருத்திற் கொண்டு முட்டையை இறக்குமதி செய்வது தொடர்பில் அவதானம் செலுத்தப்பட்டுள்ளதாக வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ குறிப்பிட்டார். (நி)

## பங்களாதேஷிலுள்ள இலங்கை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை

### வெளிவிவகார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

வங்க தேசத்தில் நிலவும் அமைதியின்மை காரணமாக அந்நாட்டில் தங்கியுள்ள இலங்கை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

அந்நாட்டிலுள்ள 3 பல்கலைக்கழகங்களில் சுமார் 50 இலங்கை மாணவர்கள் பயின்று வருவதாக அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது.

பங்களாதேஷில் உள்ள இலங்கை உயர்ஸ்தானிகர், மாணவர்களைச் சந்தித்து அவர்களின் தேவைகளை நேரில் பார்வையிட்டதுடன் மாணவர்களின் பாதுகாப்பு குறித்து பல்கலைக்கழக நிர்வாகத்துடன் கலந்துரையாடினார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கரப்பந்தாட்ட போட்டியில் ஆவரங்கால் மகாஜன சம்பியன்




வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான மாகாண மட்ட வொலி போல் போட்டியில் 16 வயதுப் பிரிவில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர்.

வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான ஆண்களுக்கான வொலிபோல் போட்டிகள் ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி யாலய மைதானத்தில் நடை பெற்றது.

இதில் 16 வயதிற்கு உட்பட்ட ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் ஆவரங்கால் மகாஜன வித்தியாலய அணியை எதிர்த்து புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி அணி மோதியது. இரு அணிகளும் ஒன்றுக் கொன்று சளைத்தவர்கள் அல்ல என்பதை நிரூபிக்கும் வகையில் விளையாடினர்.

இருப்பினும் ஆவரங்கால் மகா ஜன வித்தியாலய அணி 25:23, 25:18 என்ற புள்ளிகள் வித்தி யாசத்தில் வெற்றி பெற்று சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்துக் கொண்டனர். 3 ஆம் இடத்தை ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி யாலய அணிபெற்றது. (நி-90)

## ரெனிஸ் போட்டியில்

# சம்பியன் கிண்ணங்களை சுவீகரித்த சுண்டிக்குழி மகளிர் கல்லூரி அணிகள்




மாகாண மட்ட பெண்களுக்கான ரெனிஸ் போட்டியில் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி அணி சம்பியன் கிண்ணங்களை சுவீகரித்தன.


வடமாகாண பாடசாலைகளுக்கு இடையிலான பெண்களுக்கான ரெனிஸ் போட்டியின் இறுதியாட்டங்கள் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

இதில் 17 வயது பெண்களிற்கான போட்டியில் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும், உரும்பிராய் இந்துக்கல்லூரி இரண்டாம் இடத்தையும் கிளிநொச்சி மகா வித்தியாலயம் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர்.

20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான போட்டியில் சுண்டிக்குழி மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும் வைத்தீஸ்வரக் கல்லூரி இரண்டாம் இடத்தையும் இணுவில் இந்துக் கல்லூரி மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். (நி-90)

## மேசைப்பந்து போட்டியில்

# கிளிநொச்சி மத்திய கல்லூரி முதலிடத்தை தட்டி சென்றது




வடக்கு மாகாண மட்ட பெரு விளையாட்டுப் போட்டியில் கிளிநொச்சி மத்திய கல்லூ ரியின் மேசைப் பந்து அணி முதலாம் இடத்தினை பெற்றுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற போட்டியில் இவ் வெற்றியினை பதிவு செய்துள்ளது. (நி)

# இந்திய ரி-20 அணியின் தலைவராக சூர்யகுமார் யாதவ்

இந்திய ரி20 அணியின் தலைவராக சூர்யகுமார் யாதவ் அறிவிக்கப்பட்டுள்ளார்.

ரி-20 தொடர் மற்றும் ஒருநாள் தொடரில் விளையாடுவதற்காக இந்திய அணி இலங்கைக்கு வருகை தரவுள்ளது.

இந்நிலையில் இந்திய ரி-20 அணியின் தலைவராக சூர்ய குமார் யாதவ்வும் ஒரு நாள் அணியின் தலைவராக ரோகித் சர்மாவும் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன் ஒருநாள் மற்றும் ரி-20 அணிக்கு சுப்மன் கில் துணைத் தலைவராக அறிவிக்கப் பட்டுள்ளார். இதேவேளை குறித்த ரி-20 தொடரில் இருந்து கௌதம் கம்பீர் தலைமை பயிற்சியாளராக செயற் படவுள்ளார் என்பதும் குறிப் பிடத்தக்கது. (நி)

வலம்புரி SPORTS

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி பதவிக்காலத்தை குறைப்பதே 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் நோக்கம்

## முன்னாள் ஜனாதிபதி சிறிசேன

(கொழும்பு)

நிறைவேற்று ஜனாதிபதி முறைமையின் எல்லையற்ற அதிகாரத்தை குறைத்து ஜனாதிபதி பதவிக் காலத்தை 6 வருடங்களில் இருந்து 5 வருடங்களாக குறைப்பதே 19 ஆவது அரசியலமைப்பு திருத்தத்தின் நோக்கம் என முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் கருத்திற்கு பதிலளிக்கும் வகையில் அவர் இதனை தெரிவித்தார்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்றத்தின் அதிகூடிய பதவிக் காலத்தை 5 வருடங்களாக குறைக்காமல் விட்டமைக்கு ஜயம்பதி விக்ரமரத்னவின் அனுபவக் குறைவினால் ஏற்பட்ட தவறே காரணம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இதற்கு ஜனாதிபதியின் உரைக்கு ஜனாதிபதி சட்டத்தரணி ஜயம்பதி விக்ரமரத்ன மறுப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி)

# யுக்திய நடவடிக்கை வவுனியாவில் 19 பேர் கைது

(வவுனியா)

வவுனியாவில் மேற்கொள்ளப்பட்ட விசேட யுக்திய சுற்றி வளைப்பு நடவடிக்கையின் போது 19 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் அவர்களின் யுக்திய விசேட நடவடிக்கைக்கு அமைய வவுனியா தலைமை பொலிஸ் நிலையத் திற்குட்பட்ட பகுதிகளில் வவுனியா சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் அவர்களின் அறிவுறுத்தலுக்கமைய இவ் விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது வவுனியா தேக்கவத்தைப் பகுதியைச் சேர்ந்த 30 வயதுடைய நபர் ஒருவர் 2005 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டிருந்ததுடன் மேலும் அதே பகுதியைச் சேர்ந்த 38 வயதுடைய நபர் ஒருவர் 3580 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருளுடன் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து மகாறம்பைக்குளம் பகுதியில் இடம்பெற்ற சோதனையின் போது அப்பகுதியைச்சேர்ந்த இருவர் 100 கிராம் கஞ்சா கலந்த மாவாவுடன் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் திறந்த பிடியாணை இருந்த ஐந்து நபர்களுடன், பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த இரண்டு நபர்களும் கைது செய்யப்பட்டனர்.

தொடர்ந்தும் ஆள் அடையாள ஆவணங்கள் உடைமையில் வைத்திருக்காத 4 பெண்கள் மற்றும் 4 ஆண்களையும் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டிருந்தனர். கைது செய்யப்பட்ட அனைவரும் மேலதிக விசாரணைகளின் பின்னர் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-250)

## யாழில் இடம்பெற்ற

# தமிழ்மக்கள் கூட்டணியின் தேசிய மாநாடு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்கள் கூட்டணியின் முதலாவது தேசிய மாநாடு யாழ்ப்பாணத்தில் நேற்றைய தினம் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் தமிழ் மக்கள் கூட்டணியின் செயலாளர் நாயகமும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தலைமையில் தேசிய மாநாடு நடைபெற்றது.

இதன்போது பிரதம அதிதியாக இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் யாழ்ப்பாண மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அரசறிவியல் துறைத் தலைவர் கே.ரி.கணேசலிங்கமும் கலந்துகொண்டு உரையாற்றினர்.






மாநாட்டில் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா, வடமாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் சர்வேஸ்வரன், யாழ் மாநகர சபையின் முன்னாள் முதல்வர் வி. மணிவண்ணன் உள்ளிட்டவர்களுடன் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள், ஆதரவாளர்கள் என பெருமளவானோர் கலந்து கொண்டனர். (நி-33)

# இராசிபலன்

22.07.2024
ஆனி 06, திங்கட்கிழமை,
பிரதமை பிற்பகல் 3.13 மணிவரை

திருவோணம் பின்னிரவு 1.07 மணிவரை
சுபநேரம் 12.01-1.31 மணிவரை
இராகுகாலம் 7.31-9.01 மணிவரை

அமிர்தசித்தம்
சந்திராஷ்டமம் - ரோகினி, மிருகசீரிடம்

வள்ளவன்

**மேஷம்** வீட்டுத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், வருங்கால நலன்கருதி சேமிக்க முற்படுவீர்கள், செய்தொழிலில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**கடகம்** புதிய பொருட்களை வாங்கும் எண்ணம் உருவாகும், எண்ணியது நிறைவேறும் வாய்ப்புண்டு, முன்னேற்றம் கருதிய பயணங்கள் இடம்பெறலாம், போசன சுகமுண்டு.

**துலாம்** உறவினர் வழியில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள், பயணங்களால் பலனுண்டு.

**மகரம்** வியாபார நலன்கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், கற்பனை மிகுதியான நாள், ஆற்றல் மிக்கவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், திடீர் பயணம் ஏற்படலாம்.

**ரிஷபம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், குடும்பத்தில் நிலவி வந்த குழப்பங்கள் அகலும், வம்பு வழக்குகள் தீர்ந்து வளம் காணும் நாள்.

**சிம்மம்** நல்லவர்களின் தொடர்புகள் கிடைக்கும், குடும்ப மகிழ்ச்சி கூடும் வாய்ப்புண்டு, நன்மைகள் நாடி வரும் நாள், மறைமுகப் போட்டிகள் மாறும்

**விருச்சிகம்** பக்குவமாகப் பேசி காரியம் சாதிப்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், விருந்தினர் வருகையுண்டு, உடல் நலன் சீராகும்.

**கும்பம்** தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், பணப்பற்றாக்குறை ஏற்படலாம், அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், சுப விரயங்கள் ஏற்படலாம்.

**மிதுனம்** உடல் நலனில் கவனம் செலுத்தும் சூழ்நிலை ஏற்படலாம், வார்த்தைகளில் நிதானம் தேவை, பணியில் ஏதாவது குறை கேட்கும் வாய்ப்புண்டு, பயணங்களின் போது கவனம் தேவை.

**கன்னி** எதிர்பார்த்த தனவரவுகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, தொட்ட காரியங்கள், கைகூடும் வாய்ப்புண்டு, பொது நலனில் அதிக அக்கறை காட்டுவீர்கள்.

**தனுசு** வீட்டுத் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், செய்தொழில் மேன்மையுண்டு, சுபகாரியப் பேச்சுக்களில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மீனம்** ஆடம்பரப் பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, குடும்ப மகிழ்ச்சி கூடும், பொழுது போக்கு விடயங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

பிறருக்கு உதவி செய்வதே வாழ்க்கையாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## நாம் மகிழ்வுடன் கல்வி பயில்கிறோம்

# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி மாணவ ஆசிரியர்கள் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியற் கல்லூரி மாணவ ஆசிரியர்கள் உள நெருக்கீட்டுடன் கல்வி நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் எனும் கருத்துக்கு மாணவ ஆசிரியர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் தமிழ் தேசிய மக்கள் முன்னனியின் பாராளுமன்ற உறுப்பினர் செ.கஜேந்திரன், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்பில் பேசும் போது மாணவ ஆசிரியர்கள் உள நெருக்கீட்டுடன் இருப்பதாக தெரிவித்திருந்த கருத்துக்கே மாணவ ஆசிரியர்கள் தமது எதிர்ப்பைத் தெரிவித்துள்ளனர்.

இலங்கையில் உள்ள தேசிய கல்வியியற் கல்லூரிகளில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி உச்ச நிலையில் இருந்து வருகின்றது. மேற்குறித்த கருத்தினால் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்பில் மக்கள் மத்தியில் தவறான கண்ணோட்டத்தை தோற்றுவிக்க வாய்ப்புக்கள் அதிகம்.

அத்துடன் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் கல்வி பயிலும் மாணவ ஆசிரியர்களை மேற்குறித்த கருத்து இழிவுபடுத்துவதாயும் அமைந்துள்ளது.

எனவே யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி தொடர்பான உண்மைக்குப் புறம்பான, வேண்டுமென்றே உருவாக்கப்பட்ட கருத்துக்களை வன்மையாக கண்டிப்பதாகவும் மாணவ ஆசிரியர்கள் தெரிவித்துள்ளனர். (க)

# யாழில் வர்த்தக கண்காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத் தொழில் துறைகளை பிரபல்யப்படுத்தி மேம்படுத்தும் நோக்குடன், "யாழ்ப்பாணம் எக்ஸ்போ 2024" எனும் வர்த்தக கண்காட்சி யாழ்.முற்றவெளி மைதானத்தில் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி முதல் 25 ஆம் வரையில் நடைபெற உள்ளது.

இக் கண்காட்சியினை முற்றிலும் இலவசமாக பார்வையிட முடியும். முதல் நாள் நிகழ்வில் யாழ். இந்திய துணைத்தூதர், வடமாகாண ஆளுநர் ஆகியோர் பிரதம அதிதியாக கலந்து கொள்வார்கள். இரண்டாம் நாள் நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் பிரதம அதிதியாக கலந்து கொள்ளவுள்ளார்.

கண்காட்சி தொடர்பில் யாழ்ப்பாணத்தில் உள்ள தனியார் விடுதி ஒன்றில் நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே ஏற்பாட்டாளர்கள் அதனை அறிவித்துள்ளனர்.

கண்காட்சி தொடர்பில் மேலும் தெரிவிக்கையில், கட்டுமானம் மற்றும் பிற தொழில் துறைகளில் பங்காளர்களுக்கு தங்கள் தயாரிப்புகளை காட்சிப்படுத்த ஒரு தளத்தை உருவாக்குவதற்கான வாய்ப்பை உருவாக்கும் நோக்கில் இந்தக் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. 200 இற்கும் மேற்பட்ட காட்சி கூடங்களுடன் பல்வேறு நிபுணர்கள் மற்றும் தொழில் வல்லுநர்கள், கட்டுமானம் மற்றும் பிற தொழில்களை இணைந்து மேம்படுத்துவதற்காக ஒருங்கிணைக்கப்படுகின்றனர். அதே சமயம் சிறு தொழில் முயற்சியாளர்களின் தயாரிப்புகள் மற்றும் சேவைகளை பிரபலப்படுத்தவும் இது உதவும் என அவர்கள் தெரிவித்தனர். (நி-33)

# சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் விஜயம்

(யாழ்ப்பானம்)

அண்மைய நாட்களில் பாரிய சர்ச்சைகளில் சிக்கிக் கொண்ட சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா விஜயம் ஒன்றை மேற்கொண்டதுடன் சம்பந்தப்பட்ட தரப்புக்களுடன் கலந்துரையாடலிலும் ஈடுபட்டிருந்தார்.



இதன்போது சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை நிர்வாகம் தொடர்பாக கடந்த காலங்களில் மக்களால் முன்வைத்த 16 குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக அமைச்சர் ஆராய்ந்தார்.

குறிப்பாக வைத்தியர்கள் கடமை நேரத்தில் இல்லாமை, சட்ட வைத்திய அதிகாரி மீதான குற்றச்சாட்டுக்கள், விபத்து அவசர சிகிச்சைப் பிரிவை இயக்காமைக்கான காரணங்கள் தொடர்பாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கேட்டறிந்திருந்தார்.

இதன்போது பெரும்பாலான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்திருந்தார்.

பொதுமக்கள் பலரும் வைத்தியர் அர்ச்சுனா மீளவும் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலைக்கு பணிப்பாளராக வர சந்தர்ப்பம் உள்ளதா என அமைச்சரிடம் கேள்வி எழுப்பியிருந்தனர். இது தொடர்பாக சுகாதார அமைச்சர் மற்றும் ஜனாதிபதியுடன் கலந்துரையாடிய பின்னராக முடிவுகளை தெரியப்படுத்துவதாக அமைச்சர் பதிலளித்திருந்தார்.

மேற்படி கலந்துரையாடலில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன், மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் பத்திரன, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கேதீஸ்வரன், சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் ரஜீவ், வைத்தியசாலையின் அபிவிருத்திக் குழு மற்றும் பொதுமக்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (நி-30)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 250 | 160-200 | 250 |
| உருளைக்கிழங்கு | 280 | 250 | -- | 300 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 400-500 | 450 |
| தக்காளி | 400 | 450 | 350-400 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 160 | 180 | 140-160 | 200 |
| கோவா | 400 | 400 | 300 | 400 |
| கரட் | 450 | 480 | 500 | 500 |
| பூசணி | 220 | 230 | 150 | 250 |
| புடோல் | 160 | 180 | 200 | 200 |
| வாழைக்காய் | 250 | 250 | 160-220 | 250 |
| சின்ன வெங்காயம் | 250 | 400 | 250-450 | 350 |
| பெரிய வெங்காயம் | 250 | 250 | 240 | 250 |
| பாகற்காய் | 700 | 600 | 700 | 800 |
| வெண்டக்காய் | 250 | 200 | 250 | 300 |
| கருணைக் கிழங்கு | 180 | 180 | 150 | 200 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300-250 | 300 |
| லீக்ஸ் | 500 | 550 | 350 | 600 |
| பீற்றூட் | 400 | 400 | 450 | 500 |
| கறிமிளகாய் | 900 | 850 | 400 | 1000 |
| முருங்கைக்காய் | 400 | 450 | 200-300 | 400 |
| போஞ்சி | 600 | 650 | 400 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 250 | -- | 220 |
| கீரை - 1 பிடி | 80 | 60 | 60 | 80 |
| தேசிக்காய் | 500 | 600 | 400-500 | 600 |
| தேங்காய் (ஒன்று) | 120 | 90 | 60-120 | 80-120 |
| இராசவள்ளி | 450 | 650 | -- | 600 |
| வெங்காயப்பூ | 300 | 400 | -- | 500 |
| முள்ளங்கி | 120 | 120 | 150 | 120 |
| பொன்னாங்காணி | 90 | 80 | 100 | 60 |
| வல்லாரை | 50 | 60 | 100 | 80 |
| ஈரப்பலா | 80 | 60 | 100 | 80 |

# ஆனைக்கோட்டை தொல்லியல் அகழ்வின் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

பிரித்தானிய சமூக முன்னேற்ற மையத்தின் மரபுரிமை அலகின் நிதிப்பங்களிப்புடனும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் அனுசரணையுடனும் ஆனைக்கோட்டையில் மேற்கொள்ளப்பட்ட தொல்லியல் அகழ்வாய்வின் நிறைவு விழாவும் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் யாழ்ப்பாண பண்பாட்டு மையத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்றது.



யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவர் வாழ்நாள் பேராசிரியர் பரம புஷ்பரட்ணத்தின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக சத்திர சிகிச்சை பேராசிரியரும் யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் முன்னாள் மருத்துவ பீடாதிபதியும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் உப தலைவருமாகிய ரவிராஜ் கலந்து கொண்டார்.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் அகழ்வாய்வு பணிகளில் ஜேர்மன் நாட்டினைச் சேர்ந்த கலாநிதி அரியானா ஈடுபட்டு வருகின்றார்.

யாழ்ப்பாணம் கந்தரோடை பகுதியில் 2023ஆம் ஆண்டு அகழ்வாய்வுகளை மேற்கொண்டு அவற்றின் ஆய்வுகளை வெளிப்படுத்தியவர். தற்போதும் கந்தரோடை அகழ்வாய்வு பணிகளுக்காக ஜேர்மன் நாட்டில் இருந்து வருகை தந்துள்ளார்.



அந்நிலையில் கடந்த ஒரு மாத காலமாக ஆனைக்கோட்டை பகுதியில் இடம்பெற்ற தொல்லியல் அகழ்வாய்வு பணிகளிலும் பங்கேற்றியுள்ளார்.

சான்றிதழ் வழங்கும் நிகழ்வின் போது, தனது பிள்ளைகளுடன் தமிழர் கலாசார உடைகளுடன் பங்கேற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-33)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருள் பாவனையால் ஆண்டுக்கு 40,000 மரணங்கள்

(கொழும்பு)

**போதைப்பொருள் காரணமாக ஆண்டுதோறும் சுமார் 40,000 பேர் உயிரிழப்பதாக ஆபத்தான மருந்துகளின் தேசிய கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.**

அவர்களில் புகையிலை பாவனையினால் சுமார் 20,000 பேரும் மதுபாவனையினால் 18,000 பேரும்

மற்ற போதைப்பொருள் பாவனையினால் சுமார் 2,000 பேரும் உயிரிழப்பதாக தேசிய ஆபத்தான போதைப்பொருள் கட்டுப்பாட்டுச் சபையின் தலைவர் தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் பாவனையில் இருந்து குழந்தைகளை பாதுகாப்பது பெற்றோரின் பொறுப்பு என அதன் தலைவர் தெரிவித்தார். (நி)

# ஐ.எம்.எப் தூதுக்குழு அடுத்த வாரம் இலங்கைக்கு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தின் தூதுக் குழுவொன்று அடுத்த வாரம் இலங்கை வரவுள்ளது.

அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பொன்றில் நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் பொருளாதாரத்தில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் மற்றும் அதற்கான வழிவகைகள் தொடர்பில் கலந்துரையாடுவதற்காக இந்தத் தூதுக்குழு இலங்கை வரவுள்ளது.

எவ்வாறாயினும் சர்வதேச நாணய நிதியத்தின் இந்த தூதுக்குழு நீடிக்கப்பட்ட நிதி வசதி திட்டம் தொடர்பில் மதிப்பாய்வை மேற்கொள்ளாது என நிதி இராஜாங்க அமைச்சர் ஷெஹான் சேமசிங்க குறிப்பிட்டுள்ளார். (நி)

## ஆதனப்பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் 24. ஆஸ்பத்திரி வீதி, 745 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் E.E.நீக்கிலாப்பிள்ளை என ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் இல-205/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் ராதாவும் பெண் தவராணியும் 29.06.2005 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி சி.ஜெயசித்திரா முகதாவில் 119 ஆம் இலக்க வெளிப்படுத்தல் உறுதி மூலம், தமது மாமன் மாமியாகிய கந்தையா கனகசபையும் பெண் இராசம்மாவும் 20.04.1983 ஆம் ஆண்டு தமக்கு நன்கொடையாக வழங்கினார்கள் என்றும் குறித்த ஆதனமானது 1983 ஆம் ஆண்டிற்கு முன்னரே அவர்களது 60 வருடங்களுக்கு மேற்பட்ட ஆட்சியுடையது என்றும், 20.04.1983 ஆம் திகதியில் இருந்து தங்கள் இருவரின் ஆட்சியிலேயே இருந்து வருகின்றது எனவும் வெளிப்படுத்தியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை இல-205/3,ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராஜேந்திரம் ராதாவும் பெண் தவராணியும் 26.10.2005 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.ஜெயசித்திரா சிறிதரன் முகதாவில் 161 ஆம் இலக்க நன்கொடை உறுதி மூலம் தமது மகளான இராஜேந்திரம் ராதா மகள் நளினிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை இல-205/3, ஆஸ்பத்திரி வீதியைச் சேர்ந்த இராஜேந்திரம் ராதா மகள் நளினி 05.05.2006ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு ரி.எம்.அந்தோனிப்பிள்ளை முகதாவில் 3037 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இல-30, 02 ஆம் குறுக்குவீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிறிஸ்ரி மகள் சிந்தியாவுக்கு வழங்கியுள்ளார்.

குறித்த ஆதனத்தை இல-368/5, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த அட்சலிங்கம் பிரதீபனும் பெண் சிந்தியாவும் (முன்னர் கிறிஸ்ரி மகள் சிந்தியா) 01.06.2013 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு திருமதி.சி.ஜெயசித்திரா முகதாவில் 1765 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் இல-205/3, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த இராசேந்திரம் ராதாவுக்கும் பெண் தவராணிக்கும் வழங்கியுள்ளனர்.

**ஆதன அட்டவணை**

வடமாகாணம், யாழ்ப்பாணம், யாழ்ப்பாணப்பகுதி, சுண்டிக்குளி கோவிற்பற்று, சிவியாதெரு இறை, யாழ்ப்பாணம் பிரதேச செயலகப்பகுதியில், யாழ்.மாநகரசபை எல்லைக்குட்பட்ட ஜே/ 74 கிராம சேவகர் பிரிவில் உள்ள "இளஞ்சிங்க ஆராட்சி வளவு" நிலப்பரப்பு பூச்சியம் குளி பதினாறரை (நி.பர.0குளி 16 1/2). இதற்குள் அமைந்துள்ள வீடும் பயிர்வகைகளும், இதற்கு எல்லைகள்-

கிழக்கு - கணபதி செல்வத்தின் ஆதனம்.
வடக்கு - மரியான் ராசுவின் ஆதனம்.
மேற்கு - ஒழுங்கை.
தெற்கு - ஆஸ்பத்திரி வீதி இதடங்களும்.

தற்போது இராசேந்திரம் ராதாவும் பெண் தவராணியும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித்துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமைகோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒருமாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும், உரிமைகோராவிடத்து குறித்த ஆதனமானது இராஜேந்திரம் ராதாவும் பெண் தவராணியும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப்பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத்தருகின்றேன்.

(சி-822)

**ஆணையாளர்.யாழ் மாநகர சபை.**

## யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி
### சிற்றுண்டிச்சாலைகள் நடாத்துவதற்கான கூறுவிலை கோரப்படுகின்றது 2024/2025

1. நியதிகள்,நிபந்தனைகள் உள்ளடக்கியதான விரிவான கேள்வி கோரல் விபரத்தினை அலுவலகத்தில் பார்வையிட முடியும்.
2. விண்ணபப்படிவங்களை 22.07.2024 இன்று முதல் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.
3. பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப்பத்திரங்களை 20.08.2024 பி.ப 12.30 முன்னர் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபாலாகவோ அலுவலகத்திற்கு

   **அதிபர்,**
   **யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி,**
   **யாழ்ப்பாணம்.**

   எனும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும்.
4. கடித உறையில் வலப்பக்க மேல் மூலையில் **"சிற்றுண்டிச்சாலைகள் கேள்வி மனுக்கோரல்"** என குறிப்பிடவும்.
5. அதிகாரம் பெற்ற கேள்விச்சபை 20.08.2024அன்று பி.ப 12.30 மணிக்கு கூடி (விண்ணப்பதாரர்களுக்கு முன்பு கேள்விப்பத்திரம் திறக்கப்பட்டு) இறுதித் தீர்மானம் எடுக்கப்படும்.
6. கேள்விப் பத்திரம் திறக்கப்படும் போது ஒரு விண்ணப்பத்திற்கு ஒருவரே பிரதிநிதித்துவப்படுத்த முடியும். ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அங்கத்தவர்கள் ஒரு விண்ணாப்பப் படிவத்தை மட்டுமே சமர்ப்பிக்கமுடியும்.

(சி-834)

**அதிபர், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி.**

## கல்யாணமாலை
### சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு:1973-இந்து<br>நட்சத்திரம்: சுவாதி<br>கி.பா: 50<br>7இல் செவ்<br>உயரம்:5'3"<br>தகைமை/தொழில்:Lap Research Officer(அவுஸ்ரேலியா)<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14682 | பிறப்பு-1994-இந்து<br>நட்சத்திரம்: அனுசம் 3இல்சூரிசெவ்<br>உயரம்: 5'5"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு<br>தொ.இ: G/14037 |
| பிறப்பு:1991-இந்து<br>நட்சத்திரம்:சதயம்<br>கி.பா:22 1/2 2 இல் செவ்<br>உயரம்:5'11"<br>தகைமை/தொழில்: MBBS,Doctor<br>எதிர்பார்ப்பு:Doctor,Lawyer,. Engineer,Lecturer<br>தொ.இ: B/14683 | பிறப்பு-1996-RC<br>நட்சத்திரம்:அச்சுவினி<br>9 இல் சூரிசெவ்<br>உயரம்:5'3"<br>தகைமை/ தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு:வெளிநாடு, அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14039 |
| பிறப்பு:1997-இந்து<br>நட்சத்திரம்: உத்தராடம்<br>உயரம்:5'8"<br>தகைமை/தொழில்:MBBS, Doctor(London)<br>எதிர்பார்ப்பு:படித்த பெண், காரைநகர் விரும்பத்தக்கது<br>தொ.இ: B/14684 | பிறப்பு-1988-இந்து<br>நட்சத்திரம்: திருவோணம்<br>கி.பா:48<br>உயரம்:5<br>தகைமை/தொழில்:BA,MA,M.Phil<br>எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்<br>தொ.இ: G/14042 |

**கல்யாணமாலை**
**இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்**
**தொடர்பு:- 021 720 1005, 021 221 5434**
**E-mail:- kalyanamalai.jaffna@gmail.com**
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாரதம்

# பங்களாதேஷில் தொடரும் வன்முறைகள் ஆர்ப்பாட்டக்காரர்களை சுட உத்தரவு



(டாக்கா)
பங்களாதேஷில் சுதந்திர போராட்ட தியாகிகளின் வாரிசுகளுக்கு அரசு வேலை வாய்ப்புகளில் 30 சதவீதம் இடஒதுக்கீட்டை எதிர்த்து மாணவர்கள் போராட்டத்தில் குதித்தனர்.

அரசுக்கு எதிராக போராடும் மாணவர்கள் மீது ஆளும் அவாமி லீக் கட்சியின் மாணவர் அமைப்பினர் தாக்குதல் நடத்தினர்.

இரு தரப்புக்கும் மோதல் ஏற்பட்டு நாடு முழுவதும் வன்முறை வெடித்துள்ளது. அரசு தொலைக்காட்சி நிலையத்துக்கு தீ வைக்கப்பட்டது. தலைநகர் டாக்காவின் வடக்கே அமைந்துள்ள நர்சிங்டி நகரில் உள்ள சிறைச்சாலைக்கு போராட்டக்காரர்கள் தீ வைத்ததை தொடர்ந்து, சுமார் 800 கைதிகள் சிறையில் இருந்து தப்பினர்.

வன்முறை கட்டுக்குள் வராததால் நாடு முழுவதும் கடுமையான ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்தப்பட்டுள்ளது.

மேலும் இராணுவமும் களமிறக்கப்பட்டுள்ளது. ஆனாலும் வன்முறை கட்டுக்குள் வரவில்லை. அங்கு தொடர்ந்து வன்முறை சம்பவங்கள் நடந்து வருகிறது. வன்முறையில் இதுவரை 130 இற்கும் மேற்பட்டோர் பலியாகி உள்ளனர். ஆயிரக்கணக்கானோர் காயம் அடைந்துள்ளனர்.

இந்த நிலையில் போராட்டத்தைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகளை அரசு எடுத்து வரும் நிலையில் ஊரடங்கை மீறி வன்முறையில் ஈடுபடுவோரைக் கண்டதும் சுடவும் உத்தரவிடப்பட்டுள்ளது. (நி)

# பாலஸ்தீனத்தை இஸ்ரேல் ஆக்கிரமித்தது சட்டவிரோதம்-அனைத்துலக நீதிமன்றம் அறிக்கை

(ஜெனீவா)
பாலஸ்தீன பகுதியை பல்லாண்டு காலமாக இஸ்ரேல் ஆக்கிரமித்துள்ளது சட்டவிரோதம் என்றும் அது விரைவில் முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டும் என்று ஐ.நாவின் அனைத்துலக நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்தத் தீர்ப்பு அறிவுரையாக வழங்கப்படும் ஒன்று. ஏனெனில் அனைத்துலக நீதிமன்றத்தின் இந்தப் பிரகடனம் எந்த நாட்டையும் கட்டுப்படுத்தாது.

அனைத்துலக நீதிமன்றத்தின் இந்தப் பிரகடனத்தை பொய்களின் அடிப்படையிலான ஒன்று என்று இஸ்ரேல் வர்ணித்தது. ஆனால் அதையே பாலஸ்தீன அமைப்பு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது எனக் குறிப்பிட்டது.

இஸ்ரேல் மீது ஹமாஸ் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி தாக்குதல் நடத்தியதைத் தொடர்ந்து, ஹமாஸுக்கு எதிராக இஸ்ரேல் மேற்கொண்டுள்ள போர் நடவடிக்கையில் ஏற்பட்டுள்ள உயிர்ச்சேதத்தால் உலக அளவில் கவலை அதிகரித்து வரும் நிலையில் அனைத்துலக நீதிமன்றத்தின் இந்தப் பரிந்துரை வெளியாகியுள்ளது.




இதேவேளை, பாலஸ்தீன நகரமான காசாவின் பல்வேறு இடங்களில் நேற்று இஸ்ரேல் நடத்திய தாக்குதலில் 39 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இஸ்ரேலிய பீரங்கிப் படைகள் ரஃபா நகரின் மேற்கு மற்றும் வடக்கு பகுதிகளை நோக்கி முன்னேறும்போது இந்த தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி)

# ஹெய்டி கடல் பகுதியில் படகில் தீ



(ஜெனீவா)
ஹெய்டியின் வடக்கு கடற்பகுதியில் பயணித்த படகு தீப்பிடித்ததில் குறைந்தது 40 புலம்பெயர்ந்தோர் உயிரிழந்துள்ளதாக ஐக்கிய நாடுகள் சபையின் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்நிலையில் படகில் பயணித்த மேலும் 41 பேர் ஹெய்டி கடலோர காவல் படையினரால் பாதுகாப்பாக மீட்கப்பட்டதாக புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு தெரிவித்துள்ளது.

தீவிபத்துக்கான சரியான காரணம் இன்னும் தெளிவாகத் தெரியவில்லை. ஆனால் படகில் இருந்தவர்கள் மெழுகுவர்த்திகளை ஏந்தி தாங்கள் பாதுகாப்பாக பயணிக்க வேண்டும் என பிரார்த்தனை செய்த வேளை எரிபொருள் நிரப்பப்பட்ட கொள்கலன்களில் தீ பிடித்து எரிந்துள்ளதாக உள்ளூர் அதிகாரி ஒருவர் வெளிநாட்டு செய்திச் சேவைக்கு தெரிவித்தார்.

தீ விபத்தில் காயமடைந்தவர்கள் புலம்பெயர்வுக்கான சர்வதேச அமைப்பு மூலம் சிகிச்சை பெற்று வருவதோடு 11 பேர் அருகில் உள்ள வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளதாக அந்த அமைப்பு தெரிவித்துள்ளது. (நி)

# கொ...
# ஏமன...
## டெல்அ...


(டெல்அவிவ்)—
ஏமனின் ஹொ...
வான்வெளித் தாக்...
ஹவுதி கிளர்ச்சிய...

ஏமனின் செங்கடல் துறைமுக நகரான ஹொடெய்டா மீது தாக்குதல் இடம்பெற்றுள்ளதாக யேமன் கிளர்ச்சியாளர்களின் அல்மஷிரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

பெருமளவு உயிர்ச்சேதங்கள் காயங்கள் ஏற்பட்டுள்ளதாக அல் மஷிரா தொலைக்காட்சி தெரிவித்துள்ளது.

இதேவேளை இஸ்ரேலின்

# உக்ரைன் ஜனா... தொலைபேசி



(வோஷிங்டன்)
ரஷ்ய பயங்கரவாதத்திற்கு எதிரான எங்களுடைய திறனை வலுப்படுத்த உதவியமைக்கு அமெரிக்காவுக்கு உக்ரைன் எப்போதும் நன்றியுடன் இருக்கும் என ஜனாதிபதி ஜெலன்ஸ்கி தெரிவித்துள்ளார்.


அமெரிக்காவில் எதிர்வரும் நவம்பரில் ஜனாதிபதித்தேர்தல் நடைபெற உள்ளதுடன் இதில் குடியரசு கட்சிக்கான வேட்பாளராக

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ...ழுந்து விட்டெரியும் ...ன் துறைமுக நகரம்!

## ...அவிவ் தாக்குதலுக்கு பதிலடி

**...றாடெய்டா நகரின் மீது இஸ்ரேல் ...தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக ...சியாளர்கள் தெரிவித்துள்ளனர்**



விமானங்கள் தாக்குதலை மேற்கொண்டுள்ளதாக இஸ்ரேலின் இராணுவ பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

வெள்ளிக்கிழமை இஸ்ரேல் தலைநகர் மீது ஹவுதி கிளர்ச்சியாளர்கள் ஆளில்லா விமான தாக்குதலை மேற்கொண்டிருந்தது.

இஸ்ரேலிய பிரஜைகளிற்கு தீங்கு விளைவித்ததை தொடர்ந்து ஏமனின் ஹவுதி கிளர்ச்சியாளர்களிற்கு செய்தியொன்றை தெரிவிப்பதற்காகவே இந்த தாக்குதல் இடம்பெற்றதாக இஸ்ரேலின் பாதுகாப்பு அமைச்சர் யோவ்கலன்ட் தெரிவித்துள்ளார்.

ஹைடெய்டாவில் தற்போது பற்றி எரிந்து கொண்டிருக்கும் தீ மத்திய கிழக்கு முழுவதும் தெரிகின்றது அதன் முக்கியத்துவம் தெளிவானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஹவுதிகள் எங்களிற்கு எதிராக 200 தடவை தாக்குதல்களை மேற்கொண்டார்கள் முதல் தடவை அவர்கள் எங்கள் பொது மக்களை தாக்கினார்கள் நாங்கள் தாக்கினோம் தேவைப்பட்டால் எந்த இடத்திலும் இதனை செய்வோம் என அவர் தெரிவித்துள்ளார். (நி)

## ...னாதிபதி-ட்ரம்ப் ...சி உரையாடல்



முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் அறிவிக்கப்பட்டுள்ளார்.

இந்த தேர்தலை முன்னிட்டு பல்வேறு வெளிநாட்டு தலைவர்களிடம் ட்ரம்ப் ஆதரவு கோரி பேசி வரும் நிலையில் உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி மற்றும் ட்ரம்ப் ஆகிய இருவரும் தொலைபேசி வழியே பேசி கொண்டுள்ளனர்.

அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தலுக்கான குடியரசு கட்சிக்கான வேட்பாளராக நியமிக்கப் பட்டதற்காக எனக்கு உக்ரைன் ஜனாதிபதி வாழ்த்துகளை தெரிவித்தாகவும் அடுத்த அமெரிக்க ஜனாதிபதியாக உலகத்திற்கு நான் அமைதியை கொண்டு வருவேன் எனவும் முன்னாள் ஜனாதிபதி ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

மேலும் பல உயிர்களை பலி வாங்கி எண்ணற்ற குடும்பத்தினரை துன்பத்தில் ஆழ்த்திய போரை முடிவுக்கு கொண்டு வருவேன் எனவும் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதேபோன்று உக்ரைன் ஜனாதிபதி ஜெலன்ஸ்கி வெளியிட்ட எக்ஸ் பதிவில் அமெரிக்காவின் ஜனாதிபதி தேர்தலுக்கான குடியரசு கட்சி வேட்பாளராக நியமிக் கப்பட்டதற்காக ட்ரம்புக்கு வாழ்த்துக்களை தெரிவித்து கொண்டதாகவும் பென்சில்வேனியாவில் நடந்த அதிர்ச்சிகர கொலை முயற்சிக்கு கண்டனமும் தெரிவித்தாக அவர் பதிவிட்டுள்ளார். (நி)

## திடீரென இடிந்து விழுந்த பாலம் 11 பேர் சீனாவில் உயிரிழப்பு

(பீஜிங்)

சீனாவின் ஷான்சி மாகாணத்தில் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்கு காரணமாக நெடுஞ்சாலையில் உள்ள பாலம் இடிந்து விழுந்து விபத்துக்குள்ளானதில் 11 பேர் உயிரிழந்துள்ளதோடு 30 இற்கும் மேற்பட்டோர் மாயமாகியுள்ளனர்.

ஷாங்லூ நகரில் உள்ள ஜாஷூய் கவுண்டியில் அமைந்துள்ள பாலம் நேற்று முன்தினம் மாலை பெய்த கனமழையாலும் அதனால் ஏற்பட்ட திடீர் வெள்ளப்பெருக்காலும் இடிந்து விழுந்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

பாலம் இடிந்து விழுந்ததில் ஏராளமான வாகனங்களும் ஆற்றில் விழுந்து



அடித்துச் செல்லப்பட்டுள்ளன. இதில் ஆற்றில் விழுந்த ஐந்து வாகனங்களை மீட்புக் குழுவினர் மீட்டதாகவும் மாயமானவர்களை தேடி வருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

மீட்புப் பணிகளுக்கு கூடுதலாக ஒரு குழு அனுப்பப் பட்டுள்ளதாக அவசர மேலாண்மை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

சீனாவின் தேசிய தீயணைப்பு படை மற்றும் மீட்புக் குழு 736 பேர், 76 வாகனங்கள், 18 படகுகள் மற்றும் 32 ஆளில்லா விமானங்கள் என்பன மீட்புப் புணிகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

"மக்களின் உயிர் மற்றும் உடைமைகளைப் பாதுகாக்க, மீட்பு மற்றும் நிவாரண முயற்சிகளை முழுவதுமாக மேற்கொள்ள வேண்டும்" என்று சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் வலியுறுத்தியுள்ளார். (நி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீரி சம்பா செய்கையை விரிவுபடுத்தத் திட்டம்

## விவசாய அமைச்சர்



(கொழும்பு)

அடுத்த பருவத்தில் அம்பாந் தோட்டை மாவட்டத்தில் 2000 ஏக்கர் கீரி சம்பா செய் கையை விரிவுபடுத்தவுள்ளதாக விவசாய மற்றும் பெருந்தோட்டக் கைத் தொழில் அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில், இம் முறை சிறு மற்றும் நடுத்தர அரிசி ஆலை உரிமையா ளர்கள் நெல்லைக் கொள் வனவு செய்ய வேண்டும் என் பது அரசாங்கத்தின் உத்தரவு என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு நெல் சந்தைப் படுத்தல் சபை கடன் வாங்காமல் சபைக்கு சொந்தமான பணத்தில் நெல்லை கொள்வனவு செய்வதாக வும் இதன் காரணமாக கடந்த இரண்டு பருவங்களிலும் நெல் சந் தைப்படுத்தல் சபைக்கு இலாபம் ஈட்ட முடிந்ததாகவும் அவர் சுட்டிக்காட்டி யுள்ளார்.

இதனுடன், இம்முறை நெல் சந் தைப்படுத்தல் சபை தமது பணத்தில் குறிப்பிட்ட அளவு நெல்லை கொள் வனவு செய்யும் எனவும் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளமை குறிப் பிட்டுள்ளது. (நி)

# ஜனாதிபதி வேட்பாளர்களின் செலவுகளை கட்டுப்படுத்த முடிவு

(கொழும்பு)

ஜனாதிபதி வேட்பாளர் களின் செலவுகளைக் கடுமை யாக கட்டுப் படுத்தத் தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித் துள்ளது.

தேர்தல் செலவுகள் ஒழுங் குமுறை சட்டத்தின்படி, ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கான செலவு களை ஆணையம் தீர்மானிக் கும்.

தேர்தல்கள் ஆணைக்குழு, இலஞ்ச ஊழல்விசாரணை ஆணைக் குழு, சட்டமா அதிபர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம் மற்றும் பல திணைக்களங்கள் இது தொட ர்பில் நீண்ட நேரம் கலந்துரையாடி இணக் கப்பாட்டுக்கு வந் துள்ளன.


தேர்தல் செலவுகளை ஒழுங்குப டுத்துவது குறித்து அனைத்து அரசு அதிகாரிகளுக்கும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ள தோடு செலவு வரம்பை மீறும் வேட்பா ளர்கள் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்.

இதன்படி இலஞ்ச ஊழல் ஆணைக் குழுவினால் அவர்கள் மீது வழக்குத் தொடரப்படவுள்ளது.

வேட்பு மனுத் தாக்கல் செய்த 5 நாட்களுக்குள் ஒரு வேட்பாளர் எவ்வளவு செலவு செய்ய முடியும் என்பதை தேர்தல் ஆணையம் அறிவிக்க வேண்டும்.

இந்த ஜனாதிபதித் தேர்த லில் இருந்து தேர்தல் ஒழுங்கு முறைச் சட்டம் முதன் முறையாக நடை முறைப்படுத்தப்படவுள்ளது. (நி)

# காணிகள் விடுவிக்கப்படாததால் இந்திய வீட்டுத்திட்டம் தாமதம்



(கொழும்பு)

இலங்கைத் தரப்பிலிருந்து காணிகள் விடுவிக்கப்படாமை யின் காரணமாகவே, இந்திய வீடமைப்பு திட்டம் தாமதம டைந்துள்ளது என இலங்கைக் கான இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டதாகத் தமிழ் முற் போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தமிழ் முற்போக்குக் கூட்டணி யின் பாராளுமன்ற உறுப்பினர் கள் சிலர் இலங்கைக்கான இந் திய உயர்ஸ்தானிகர் சந்தோஷ் ஜாவை நேற்று முன்தினம் சந் தித்து கலந்துரையாடியிருந்தனர்.

இதன்போது பெருந்தோட்ட மக்களுக்கான வீடமைப்பு திட் டத்தில் ஏற்பட்டுள்ள தாமதம் தொடர்பில் தங்களது தரப்பு கேள்வி எழுப்பியதாகத் தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலை வரும் பாராளுமன்ற உறுப்பினரு மான மனோ கணேசன் குறிப் பிட்டார். (நி)

# இன்று ஒரு தகவல் 190



தென்கச்சி கோ.சுவாமிநாதன்

## ஆபத்தில் உதவி

ஒரு ஆள் தனியா வந்து கொண்டிருந்தான். வழியிலே ஒரு காடு அதைத் தாண்டி அந்தப் பக்கம் போயாக வேண்டும். அங்கே தான் அவர்கள் ஊர் இருக்கிறது.

இராவாகிப் போய்விட்டது.அந்தக் காட்டிலே மிருகங்கள் அதிகம். அதனாலே இவனுக்கு தனியாகப் போவதற்கு பயம். என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டே ஒரு மரத்தடியிலே உட்கார்ந்தான். கொஞ்ச நேரத்திலே இன் னொருத்தனும் தனியாக வந்து கொண்டு இருந்தான். நல்ல வேளை ஒரு துணை கிடைத்தது என்று நினைத்தான் இவன்.

என்ன? நீயும் இந்தக் காட்டு வழியாக அடுத்த பக்கம் போக வேண்டுமா? என்று கேட்டான்.அவன் ஆமாம் என்றான். அப்படி என்றால் இந்த நிமிடத்தி லேயிருந்து நாம் இரண்டு பேரும் நண்பர்கள். ஒருத்தருக் கொருத்தர் துணையாக இந்த காட்டுவழியாக போவோம். எனக்கு ஆபத்து வந்தால் நீ துணை! உனக்கு ஆபத்து வந்தால் நான் துணை! ஆபத்து வந்தால் ஒருத்தருக்கொருத்தர் உதவி செய்ய வேண்டும்! என்று ஒரு ஒப்பந்தம் செய்து விட்டார்கள்.

அதன் பிறகு அவர்கள் இரண்டு பேரும் புறப்பட்டு காட்டு வழியாக போனார்கள்.கொஞ்ச தூரம் போனதும் ஒரு பெரிய கரடி அவர்களுக்கு எதிரிலே வந்து கொண்டிருக்கிறது. அதைப் பார்த்தார்கள் அவ்வளவு தான்...

ஒருத்தன் என்ன செய்தான் தெரியுமா? கொடுத்த வாக்குறுதியை மறந்தான். செய்த ஒப்பந்தத்தை மறந்தான்.கிடுகிடு என்று ஒரு மரத்து மேலே ஏறி உட்கார்ந்து கொண்டான். இன்னொருத்தனுக்கு மரம் ஏறத் தெரியாது! தனி ஆளாக கரடியை சமாளிக்கிறதும் சாத்தியமில்லாத விடயம். என்ன செய்யலாம் என்று யோசித்தான்.அப்படியே தரையிலே படுத்துவிட்டான். மூச்சை அடக்கிக் கொண்டான் செத்துப் போனவன் மாதிரி கிடந்து விட்டான். அந்தக் கரடி பக்கத்திலே வந்து பார்த்தது. மோந்து பார்த்தது! ஆள் செத்து விட்டான்! என்று நினைத்து அப்பாலே போய்விட்டது. கரடி போன பின்பு மரத்திலேயிருந்தவன் மெதுவாக இறங்கி வந்தான். கீழே படுத்திருந்தவனைப் பார்த்தான். அது சரி உன்னிடம் அந்தக் கரடி காது ஓரமாக என்ன சொல்லியது? என்று கேட்டான்.

அதற்கு படுத்திருந்தவன் பதில் சொன்னான். ஆபத்திற்கு உதவாத உன்னை மாதிரி நண்பர்களை நம்பாதே என்று சொல்லியது! என்றான்.

இப்படி ஒரு கதை உண்டு. இதிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டியது என்ன என்றால்? நட்பு என்றால் ஒருத்தருக்கொருத்தர் உதவியாக இருக்க வேண்டும் அது தான் நட்பு. ஆபத்து சமயத்திலே அம்பேல் ஆனா அதற்குப் பேரு நட்பு இல்லை.

அது எப்படி சார்... இரண்டு பேர் உயிருக்குமே ஆபத்து என்று வரும் போது தப்பித்துக் கொள்வது என்று தானே பார்க்க முடியும் என்று நீங்கள் நினைக்கலாம். அதுவும் நியாயம் தான். இருந்தாலும் இரண்டு பேரும் சேர்ந்து ஒரு சங்கடத்தை சுலபமாக சமாளிக்க முடியும் என்றால் அந்த நேரத்திலே கூட துணையாக இருப்பதை விட்டுவிட்டு தூர ஓடிப் போய் விட்டால் அது நன்றாக இருக்குமா?

சில பேரு மிகவும் சமார்த்தியமாக நடந்து கொண்டால் கூட நண்பர்களைக் காப்பாற்றுவது உண்டு. அதற்கு ஒரு கதை சொல்லுகின்றேன் கேளுங்கள்.

இரண்டு நண்பர்கள் இருந்தார்கள்! அவர்கள் இரண்டு பேரும் ஆளுக்கு ஒரு துப்பாக்கி வைத்திருந்தார்கள். அதை எடுத்துக் கொண்டு காட்டுக்கு வேட்டை ஆடப் போனார்கள். ஏதாவது கண்ணிலே படுகிறதா என்று அந்தக் காட்டிலே தேடிக் கொண்டு இருந்தார்கள். அந்த சமயம் பார்த்து காட்டிலாக்கா அதிகாரிகள் ஜீப்பிலே அந்தப் பக்கமாக வந்து விட்டார்கள்.

அவ்வளவு தான் அதைப்பார்த்ததும் இந்த இரண்டு பேர்லே ஒருவன் வேகமாக ஓட ஆரம்பித்தான். இன்னொருத்தன் ஒன்றும் புரியாமல் அதே இடத்திலே நின்றுவிட்டான். ஓடுறவனைப் பார்த்ததும் அந்த அதிகாரிகள் அவனைத் துரத்த ஆரம்பித்தார்கள்.

அவன் செடி கொடிகளுக்கு மத்தியிலே வளைஞ்சு வளைஞ்சு ஓடினான். இவங்களும் விடவில்லை!ரொம்ப தூரம் போய் ஒரு இடத்திலே அவனைப் பிடித்தார்கள். அதிகாரி கோபமாக அவனைப்பார்த்தார்.

ஏன் இப்படி பயந்து ஓடிவந்தாய்...? என்று லைசென்ஸை எடு என்றார். அவன் மெதுவாக தன் பாக்கெட்டிலே கையை விட்டான் லைசென்ஸை எடுத்துக் காட்டினான். அதிகாரி அதை வாங்கிப் பார்த்தார். எல்லாம் சரியா இருந்தது.

உன்னிடம் தான் லைசென்ஸ் இருக்கிறதே! அப்புறம் என்னத்திற்காக இப்படி ஓடி வந்தாய்...? என்று கேட்டார். என்னோடு அங்கே வந்திருந்த என் நண்பனிடம் லைசென்ஸ் இல்லையே என்றான்.

அவனிடம் இல்லையென்றால் உனக்கென்ன? நீ ஏன் ஓட வேண்டும்? என்று கேட்டார்.

அவனை உங்களிடம் இருந்து தப்பிக்க வைப்பதற்காகத் தான் நான் இப்படி இவ்வளவு தூரம் ஓடிவந்தேன்! என்றான்...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை




டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

## பசு மோர்

மோரானது மிகச் சிறந்த உணவு மட்டுமல்ல. சித்தமருத்துவத்தில் சிறந்த மருந்தும், அனுபானமுமாகும். மோர் ஆனது உடலிற்கு நன்மை செய்யக்கூடிய நுண்ணுயிர்களைக் கொண்டுள்ளது. எந்தப் பருவகாலத்திலும் மோர் அருந்தலாம். தினமும் 1 டம்ளர் மோர் தினசரி அருந்தலாம். கிட்டத்தட்ட 200 -225 மி.லீ அருந்தலாம். பாலுக்கும், மோருக்கும் பண்புகளில் நிறைய வித்தியாசம் உண்டு. பால் புளித்த பின்பு இயற்கையாக இருக்கும் நுண்ணுயிரிகள் சேர்ந்து பாலை பக்குவப்படுத்தி பல நல்ல நுண்ணுயிரிகளை உடலிற்கு எடுத்துச் செல்லும் தண்மையுமுண்டு. 225 மி.லிற்றர் மோரில் 260 மில்லி.கிராம் கல்சியம் உண்டு. இதனால் எண்புகளை பலப் படுத்தும். பற்களுக்கு சிறந்தது.

ஒரு நாளைக்கு ஒரு சராசரி மனிதனுக்கு தேவையான கல்சியத்தில் 1/4 பங்கு கல்சியம் மோரில் இருந்து கிடைக்கக் கூடியதாகவுள்ளது. மோரை தனியாகவோ, சோற்றுடன் சேர்த்தோ சாப்பிடலாம். உடற்சூட்டை தனித்து உடலிற்கு குளிர்ச்சியை கொடுக்கக் கூடியதாக இருக்கும்.மோரை தொடர்ந்து எடுத்து வர வயிற்றுப் புண் முற்றாக ஆற்றக் கூடியதாக இருக்கும். உடலின் சமிபாடும் சீராகும். பொதுவாக மாதவிடாய் நின்ற பின்பு பெண்கள் கம்பங்கூழுடன் மோர் சேர்த்து சாப்பிட்டுவர இரும்புச்சத்து, கல்சியம் சத்து ஆகியவை கிடைப்பதுடன் அவர்களுக்கு உடல் வலிமையையும் கொடுக்கக் கூடியதாகும்.

எல்லா வயதினரும்,



எல்லாக் காலங்களில் மோரைக் குடிக்கலாம். சளித்தன்மை இருப்பவர்கள் மோரில் சிறிது மிளகு தூள் அல்லது இஞ்சிப் பொடி சேர்த்து பயன்படுத்தினால் சிறந்த பயன்களைக் கொடுக்கும். பெரும்பாலும் வெண்ணெய் எடுத்த மோர் சிறந்தது.

மோருக்கு இரத்தத்தை கட்டிபடாமல் பேணும் தன்மையுள்ளது. அத்துடன் கட்டிபட்ட இரத்தத்தை கரைக்கும் ஆற்றலும் ஓரளவு உண்டு.அதாவது ஆமபாசனச் மருத்துவச் செய்கை மோருக்கு உண்டு. அது மட்டுமன்றி குருதிக் குழாய்களை நன்னிலையில் வைத்திருக்கும் ஆற்றலும் உண்டு.

இதனால் அதிகுருதி அமுக்கம் ஏற்படாமல் தடுக்கவும் செய்யும். நீரிழிவு நேயாளிகள் வர கரிச் சோற்றுடன் புளித்த மோர் சேர்த்து எடுப்பது சிறந்து. எனவே சித்த மருத்துவத்தில் மோர் சிறந்த ஓர் பத்திய உண வாகும்.மோரிலுள்ள புரதம் இலகுவில் சமிபாடு அடையக்கூடியது.

இதிலுள்ள இலக்ரிக் அமிலம் உணவுக் கால்வாயில் நோய் விளைவிக்கும். பக்றீரியாக்களை பெருக விடாமல் தடுக்கக் கூடியது. மேலும் நன்கு புளித்த மோர் துவர்ப்புச்சுவை உடையதால் (மோர் பெருக்கி என்பதால் மோருடன் நன்கு நீர் சேர்த்து கடைந்தெடுத்தல் என்று பொருள். எனவே மோரில் புளிப்புச் சுவையுடன் துவர்ப்புச் சுவையும் மேலோங்கிக் காணப்படும்)

வாய்க்குழி, இரப்பை, குடல் என்பவற்றிலுள்ள Superficial Proteins ஐ ஓரளவு வீழ்படிவாக்கும் தன்மை அல்லது வரட்சி ஆக்கும் தன்மையுடைய தாக இருக்கிறது. அத்துடன் துவர்ப்புச் சுவை காரணமாக உணவானது உணவுக் கால் வாயில் வேகமாகச் செல்வதைத் தடுத்து உணவைச் சிறு துகல்கலாக்கி இலகுவில் சமிபாடு- அடையவும் உதவுகிறது. மோரிற்கு போதிய தண்ணீர் சேர்த்துக் கொள்வதால் தேவைக்கு மேல்

உணவுக்கால்வாயில் வரட்சி ஏற்படுத்த மாட்டாது. வயிற்றோட்ட நோயாளிகளுக்கு மோர் சிறந்த உணவாகும். குறுகலாக அரிந்த சின்ன வெங்காயம், இஞ்சி, கறிவேப்பிலை, எலுமிச்சம் புளி என்பவற்றுடன் மோரைச் சேர்த்து பிசைந்து அருந்தும் போது ஜட்டாக்கினி நன்கு தூண்டப்படுவதுடன் மூல ரோகம், பாண்டு, கிரக கணி, தாகம் முதலியன தீரும். வெயில் காலத்தில் பருக இது ஓர் சிறந்த பானமாகும். இதில் உப்பு சிறிது சேர்த்து அருந்து வதால் கோடை காலத்தில் நீரிழப்பை தடுக்கும் பானமுமாகும்.சிலர் மோரை சுட வைத்து உணவுடன் பயன்படுத்த வேண்டும் என்பர். இது தவறு மோரை சுட வைக்கும் போது அதிலுள்ள இலக்ரோ பசிலஸ் அழிந்து போகும். ஒரு டம்ளரில் மோரில வட்டத்து இலைச்சாறு 15 மில்லி கலந்து குடித்து வர மூலத்தால் இரத்தம் போவது அதாவது இரத்த மூலத்தை நீக்கும் ஆற்றல் உண்டு. மோரில் இருந்து அதாவது தினமும் குடித்து கொண்டு வரும்போது 15 வீத ரேபொபிளேவின் சத்து உடம்பிற்கு கிடைக்கும். இது நரம்புகளிற்கும் உடல்களிற்கும் பலத்தை கொடுக் கும். தோலை வரட்சி அடையாமல் பேணக் கூடிய தாக இருக்கும். தொடர்ச் சியாக மோரை குடித்து கொண்டுவர என்பு சம்பந்தப்பட்ட நோய் வராமல் தடுப்பதோடு என்பின் அடர்த்தியை சீராக பேணும் தன்மையையும் கொடுக்கும். மலச் சிக்கல் வராமல் தடுக்கக் கூடியது. உடற் பருமனை குறைப்பதற்கும் உடலிலுள்ள நச்சுக் கழிவுகளை வெளியேற்றவும் கெட்ட கொலஸ்ரோலை அதிகரிக்க விடாமல் தடுக்கவும் தினமும் மோர் அருந் துதல் சிறந்ததாகும். மோரில் புரத ஊட்டச்சத்து இருப்ப தால் தசைகளுக்கு பலத்தை யும் கொடுக்கும். எனவே தினமும் மோர் அருந்துதல் ஆரோக்கியத்திற்கு மிகவும் சிறந்ததாகும்.

## தொழில் முனைவோர் கிராம தொடக்க விழா நிகழ்வு



(அக்கராயன்)

இளைஞர் விவசாய தொழில் முனைவோர் கிராம தொடக்க நிகழ்வு கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட கண்ணகைபுரம் கிராமத்தில் நேற்று முன்தினம் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா கலந்து கொண்டு பெயர்ப் பலகையை திரை நீக்கம் செய்து தொடங்கி வைத்தார்.

குறித்த நிகழ்வில் மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளீதரன், மாவட்ட செயலக திட்டமிடல் பணிப்பாளர், கரைச்சி பிரதேச செயலக திட்டமிடல் பிரதிப் பணிப்பாளர், கிராம சேவையாளர், கிராம மக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர். (நி-35)

## பொதுவேட்பாளர் தொடர்பில் நடைபெற்ற கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

ஜனாதிபதித் தேர்தலில் தமிழர் தரப்பில் இருந்து ஒரு பொது வேட்பாளரை நிறுத்துவதற்கான உடன்படிக்கையொன்று இன்று திங்கட்கிழமை கைச்சாத்திடப்பட உள்ள நிலையில் ஜனநாயகத் தமிழ் தேசிய கூட்டமைப்பின் கலந்துரையாடல் நேற்று இடம்பெற்றது.

யாழ்ப்பாணம் கந்தரோடை பகுதியில் உள்ள புளொட் அமைப்பின் அலுவலகத்தில். புளொட் அமைப்பின் தலைவரான பாராளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன் தலைமையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் ரெலோ அமைப்பின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ் தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் துளசி ஆகியோர் பங்காளி கட்சிகள் சார்பில் கலந்து கொண்டனர். (நி-33)

**கரவெட்டி ஒன்றிணைந்த இளைஞர் அமைப்பும் வடக்கு கிழக்கு மறுவாழ்வு அமைப்பும் இணைந்து நடத்திய இரத்ததான முகாம் கரவெட்டி பிரதேச வைத்திய சாலையில் நேற்று நடைபெற்றது.**

(படம்- மகாலிங்கம்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்கியின் பொன்னியின் செல்வன்

பாகம் - 3

காவியத் தொடர் 538





மாயிருந்தது. அவனுடைய கண்கள் கொள்ளிக் கட்டைகள் போலச் சிவப்புத் தணல் ஒளியை வீசின.

கைகளை நீட்டிப் புதைசேற்றுக்கு அப்பால் இருந்த கரையைப் பற்றினான். அங்கே நீண்டு வளர்ந்திருந்த கோரைப் புற்களின் அடிப்பகுதியைப் பிடித்துக் கொண்டான். மறுபடியும் சேற்றில் இருந்து வெளிவரப் பிரயத்தனம் செய்தான். ஆனால் புதைந்திருந்த கால்களை அசைக்கவும் முடியவில்லை.

"பெண்ணே, உனக்குப் புண்ணியம் உண்டு! என்னைக் காப்பாற்று!" என்று ஓலமிட்டான்.

இதற்குள்ளே அங்கே சேந்தன் அமுதன் வந்து சேர்ந்தான். ரவிதாஸனுடைய நிலைமை இன்னதென்பதை அவன் ஒரு நொடியில் அறிந்து கொண்டான். அவனுடைய கண்களில் இரக்கத்தின் அறிகுறி புலப்பட்டது.

பூங்குழலி அவனைப் பார்த்து, "வா, போகலாம்!" என்றாள்.

"ஐயோ! இவனை இப்படியே விட்டுவிட்டா போகிறது!"

"ஏன் சேற்றில் இவன் முழுவதும் புதைகிற வரையில் இருந்து பார்க்க வேண்டுமென்கிறாயா!"

"இல்லை, இல்லை! இவனை இப்படியே விட்டுவிட்டுப் போனால் வாழ்நாளெல்லாம் கனவு காணுவேன். இவனைக் கரையேற்றி விட்டுப் போகலாம்."

"அத்தான்! இவன் என்னைக் கழுத்தை நெறித்துக் கொல்ல நினைத்தான்."

"அவனுடைய பாவத்துக்குக் கடவுள் அவனைத் தண்டிப்பார். நாம் காப்பாற்றி விட்டுப் போகலாம்."

"அப்படியானால் உனது மேல் துண்டைக் கொடு" என்றாள் பூங்குழலி.

அமுதன் தன் மேல் துண்டைக் கொடுத்தான். அதன் ஒரு முனையைப் புதைசேற்றுக் குழிக்கு அருகில் இருந்த ஒரு புதரின் அடிப்பகுதியில் பூங்குழலி கட்டினாள். இன்னொரு முனையை ரவிதாஸனிடம் கொடுத்தாள்.

"மந்திரவாதி! இதோ பார்! இந்தத் துண்டின் முனையைப் பிடித்துக் கொண்டிரு! அதிகம் பலங்கொண்டு இழுத்தால் புதர் வேரோடு வந்துவிடும். ஆகையால் மெல்ல பிடித்துக் கொண்டிரு. நீயாகக் கரையேற முயலாதே! பொழுது விடிந்ததும் யாராவது இந்தப் பக்கம் வருவார்கள். அவர்கள் உன்னைக் கரையேற்றுவார்கள்!' என்றாள்.

"ஐயோ! இரவெல்லாம் இப்படியே கழிக்க வேண்டுமா? என்னால் முடியாது அதைக்காட்டிலும் என்னைக் கொன்று விட்டுப் போய் விடு!"

பூங்குழலி அவன் கூக்குரலைப் பொருட்படுத்தவில்லை. சேந்தன் அமுதனைக் கையைப்பிடித்து இழுத்துக் கொண்டு வந்த வழியே திரும்ப ஓடத் தொடங்கினாள்.

அவர்கள் மேட்டின் மேல் ஏறி அப்பால் காட்டில் இறங்கும் வரையில் மந்திரவாதியின் ஓலக்குரல் கேட்டுக் கொண்டிருந்தது.

(தொடரும்)

ரவிதாஸன் கோபத்தை அடக்கிக் கொண்டு, "பெண்ணே! சத்தியமாகச் சொல்கிறேன் உன்னை நான் ஒன்றும் செய்யவில்லை சற்றுக் கைகொடுத்து என்னைக் கரையிலே தூக்கிவிடு!" என்றான்.

பூங்குழலி 'ஹா ஹா ஹா' என்று சிரித்தாள். "உன்னைக் கரையேற்றிவிட என்னால் ஆகாது! உன் மந்திரத்துக்குக் கட்டுப்பட்ட பேய் பிசாசுகளையெல்லாம் கூப்பிடு!" என்றாள்.

ரவிதாஸன் இதற்குள் தொடை வரையில் சேற்றில் புதைந்து போயிருந்தான். அவன் முகத்தைப் பார்க்கப் பயங்கர

# சிறுவர் அரங்கம்



## சிங்கத்தை ஓடவிட்ட குரங்கு



(நேற்றைய தொடர்ச்சி)

ராஜா, அந்தக் காலம் எல்லாம் போய் விட்டது. இப்போது என் வாய் மட்டுமல்ல, கைகூட நீளும். பார்க்கிறீங்களா? முன்பு நான் செய்த சிறு தவறுக்கும் எனக்குத் தண்டனை கொடுத்தீங்க. அதற்குப் பழிவாங்க இப்போதுதான் நல்ல நேரம் என்ற குரங்கு, சிங்கத்தின் முன்னங் காலில் ஓர் அடி கொடுத்தது.

கோபம் அடைந்த சிங்கம், குரங்கை உதைப்பதற்காகக் காலை நீட்டியது. ஆனால், முழுவதுமாக நீட்ட முடியவில்லை.

"குரங்கே, என்னிடமே உன் வேலையைக் காட்டுகிறாயா? நான் எழுந்தேன் என்றால் உன்னை என்ன செய்வேன் என்று எனக்கே தெரியாது. இங்கிருந்து ஓடிப் போய்விடு" என்று கர்ஜித்தது சிங்கம்.

என்ன சொன்னீர்கள் எழுந்து வந்து என்னை அடிக்கப் போறீங்களா? முதலில் எழுந்து நிற்க முடியுமா என்று பாருங்கள்" என்று கேலியாகச் சொன்ன குரங்கு மீண்டும் சிங்கத்தின் காலில் ஓர் அடி கொடுத்தது.

இனிமேல் பொறுக்க முடியாது என்ற முடிவுக்கு வந்த சிங்கம், சிரமப்பட்டு எழுந்து நின்றது. குரங்கை நோக்கிக் காலை உதைத்தது. சுதாரித்துக்கொண்ட குரங்கு, சட்டென்று அங்கிருந்து ஓடிவிட்டது.

சிங்கம் எழுந்து நின்றபடியே இருந்தது. குரங்கு திரும்பி வந்தது.ராஜா, இனி உங்களால் என்னை ஒன்றும் செய்ய முடியாது. இனி நான்தான் இந்தக் காட்டுக்கு ராஜா என்று சிரித்துக் கொண்டே சொன்னது குரங்கு.

இனி உன்னை விட மாட்டேன் என்று சொல்லிக்கொண்டே குரங்கை நோக்கிப் பாய்ந்தது சிங்கம்.

குரங்குச் சட்டென்று விலகி ஓடியது. கடுங்கோபத்திலிருந்த சிங்கம், குரங்கைத் துரத்தியது. குரங்கும் சிங்கத்தின் பிடியில் அகப்படாமல் ஓடியது. குரங்கைத் துரத்திய சிங்கமும் விடாமல் ஓடிக்கொண்டே சென்றது.

சற்றுத் தூரம் ஓடிய குரங்கு உயர்ந்த மரத்தின் மீது ஏறி, உச்சிக் கிளையில் அமர்ந்து கீழே பார்த்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> உறுதியான எண்ணங்களால் உங்களைச் சுற்றி அரண் அமைத்துக் கொள்ளுங்கள். – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## மக்கள் பலத்தை காட்டாத எதுவும்...

மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்பது நம் தமிழ் கூறும் நல்லுலகின் முடிவு.

ஆக, மக்களின் கருத்துக்கள், மக்களின் அபிப்பிராயங்கள், மக்களின் ஆதங்கங்கள் என்பன தொடர்பில் கூர்ந்து கவனிக்கக் கூடியவர்களாலேயே மக்களுக்கான தீர்மானங்களை எடுக்க முடியும்.

அதாவது மக்களைப் புறந்தள்ளி விட்டு, மக்களுக்காக என்று யார் கூறினாலும் அதை விட்ட கேலிக்கூத்து வேறு எதுவுமாக இருக்க முடியாது.

உண்மை. தமிழ் மக்கள் சார்ந்து எத்தகைய முடிவுகளை நாம் எடுப்பதாக இருந்தாலும் அது தொடர்பில் தமிழ் மக்களின் கருத்துக்களை நாம் கேட்டறிந்து கொள்ள வேண்டும்.

மக்களின் கருத்துக்களைக் கேட்பதற்கே நாம் தயாரில்லாதபோது எங்களை நாங்கள் மக்கள் பிரதிநிதிகள் என்றோ அல்லது மக்கள் அமைப்புச் சார்ந்தவர்கள் என்றோ கூறுவது எந்தவகையிலும் பொருத்துடையதல்ல.

ஆம், கடந்த காலங்களில் நம் தமிழ் இனம் பட்ட துன்ப துயரங்கள் கொஞ்சமல்ல.

அதிலும் விலைமதிப்பற்ற தியாகங்களை செய்த எம் இனம் இத்துணை துன்பப்படுகிறது என்றால், அதற்குக் காரணம் என்ன என்று ஆராய்வதுதான் தக்கார் செயலாகும்.

அவ்வாறான ஆய்வுகள், தேடல்கள் இல்லாதபோது விட்ட தவறை நாம் வேறொரு வடிவில் மீண்டும் மீண்டும் விடுவதற்கு அது வழிவகுக்கும்.

அத்தகைய தவறுகள் தவிர்க்கப்பட வேண்டும். ஏனெனில் தமிழ் அரசியலில் நாம் எழுந்தமானமாக மேற்கொள்கின்ற எந்த நடவடிக்கையும் தமிழ் மக்களை – தமிழ் இனத்தைப் பாதிப்பதாக அமையும் என்பது நிறுதிட்டமான உண்மை.

தவிர, இனத்துவம் சார்ந்து நாம் ஒரு தீர்மானத்தை எடுப்பதாக இருந்தால், அது பற்றிய விளக்கம் – தெளிவுபடுத்தல் என்பன மூலைமுடுக்கெல்லாம் எடுத்துச் செல்லப்பட வேண்டும்.

இங்கு நாம் கூறுகின்ற மூலைமுடுக்கென்பது, தமிழ் மக்கள் வாழ்கின்ற எல்லைப் பரப்புகளுடன் மட்டுப்படுத்தப்படுவதாக யாரும் நினைத்துவிடக்கூடாது.

மாறாக, இந்த நாடு முழுமைக்கும் நாங்கள் எடுத்த தீர்மானத்தின் நியாயப்பாடுகள் நிரூபிக்கப்பட வேண்டும். கடந்த காலங்களில் ஆட்சியாளர்கள் எமக்குச் செய்த துரோகத்தனங்களும் அநியாயங்களும் மீள்வாசிப்புக்குட்படுத்தப்பட வேண்டும்.

இந்த விடயங்கள் வெளிநாட்டுத் தூதுவர்களிடமும் முன்வைக்கப்படுவது கட்டாயமானது.

இதைவிடுத்து ஒரு சிலர் கூடி முடிவெடுத்து அதனை அமுல்படுத்தும்போது, அதற்கு மக்களின் ஆதரவு கிடைக்காமல் போவதுடன் நியாயத்தின் பக்கம் குரல் கொடுக்கக்கூடிய மக்களும் அது சார்ந்து தமது எதிர்ப்பை வெளிப்படுத்துகின்ற நிலைமை உருவாகும்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக, தீர்மானம் எடுக்கின்றவர்களிடம் மக்களின் செல்வாக்கும் மக்களின் ஆதரவும் மிகுந்திருப்பது மிக மிக அவசியம்.

உண்மை. விழாக்கள், கூட்டங்கள் நடத்துவது கடினமன்று. அந்த நிகழ்வுகளில் மக்களைப் பாங்குபற்ற வைப்பதுதான் முக்கியமானது.

மக்களின் பங்கேற்பும் பலமும் இல்லாத அனைத்தும் வெறுமை என்பது இங்கு புரியப்பட வேண்டும்.

# நாட்டின் பொருளாதார மீட்சி கருதியே உள்ளூராட்சி மன்றத் தேர்தல் தவிர்க்கப்பட்டது

### ஜனாதிபதி ரணில் விளக்கம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு நிதி ஒதுக்கியிருந்தால், பொருளாதார மீட்சியில் கவனம் செலுத்துவதற்குப் பதிலாக நாடு மோசமான சூழலுக்கு முகம் கொடுத்திருக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் முன்னாள் உள்ளூராட்சி மன்றத் தலைவர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தேர்தல்களைவிட பல முக்கியமானப் பகுதிகளுக்கு நிதி அவசியமாக உள்ளது.

மேலும் சவால்களுக்கு மத்தியிலும், நாட்டின் பொருளாதாரம் பலப்படுத்தப்பட்டு உறுதியான அடித்தளத்தில் முன்னோக்கி நகர்த்தப்பட்டுள்ளது.

அத்துடன், கடந்த வருடங்களில் தாம் எதிர்கொண்ட சவால்களை எடுத்துரைத்த ஜனாதிபதி, பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்திருந்தமையினால் தேர்தலை நடத்த முடியவில்லை எனவும் தெரிவித்ததோடு, உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடவுள்ள வேட்பாளர்களின் வேட்பு மனுக்களை இரத்துச் செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும், சட்டமா அதிபருடன் கலந்துரையாடி எதிர்காலத்தில் தீர்மானம் எட்டப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார். (ந-7)

# தேர்தல் தொடர்பில் தேவையற்ற கருத்துக்களை வெளியிடாதீர்

### தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் கண்டிப்பு

தேர்தல் தொடர்பில் அரசியல் கட்சிகள் கருத்து வெளியிடுகையில் அவதானமாகச் செயற்படுமாறு தேர்தல்கள் ஆணையாளர் நாயகம் சமன்ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் கருத்துரைத்துள்ளதாவது,

அரசியல் கட்சிகள் தேர்தல் பிரசாரக் கூட்டங்களின் போது தேர்தலை முன்கூட்டியே நடத்துமாறு கோருவது, தேர்தல் திகதியை உத்தேசமாக வெளிப்படுத்துதல் என்பன தேர்தல் நடவடிக்கையில் தலையிடும் செயலாகக் கணிக்கப்படும்.

எனவே இது குறித்து அவதானமாகச் செயற்படுமாறு தேர்தல்கள் ஆணையாளர் சமன்ஸ்ரீ ரத்நாயக்க அறிவுறுத்தியுள்ளார். (ந-7)

# தேர்தல் கால குற்றச்செயல்கள் அதிகரிக்கிறது அபராதத் தொகை

(கொழும்பு)

தேர்தல் காலங்களில் இடம்பெறும் குற்றச் செயல்கள், முறைகேடுகளை தவிர்க்கும் நோக்கில் அபராதத் தொகையை அதிகரிக்கும் யோசனை குற்றவியல் சட்டத்திருத்தத்தினூடாக முன்வைக்கப்பட்டுள்ளது.

குற்றவியல் சட்டக் கோவையில் திருத்தம் மேற்கொள்வதற்கான சட்டமூலத்தின் ஊடாக இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

இந்த சட்டமூலம் நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவின் கையொப்பத்துடன் வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, தேர்தலின் போது இலஞ்சம் வழங்கும் குற்றத்திற்காக விதிக்கப்படும் அபராதம் 200 ரூபாவில் இருந்து 750,000 ரூபாவாக அதிகரிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வாக்கெடுப்பின் போது அநாவசிய அழுத்தம் பிரயோகத்திற்கு விதிக்கப்பட்ட 500 ரூபா அபராதம் ஒரு இலட்சம் ரூபாவாக அதிகரிக்கப்படவுள்ளது.

தேர்தலொன்றில் ஆள்மாறாட்டம் செய்யும் குற்றத்திற்காக இதுவரை 300 ரூபா மாத்திரமே அபராதமாக அறவிடப்பட்டது.

இதனை ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிக்க சட்டமூலத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

தேர்தல் கணக்குகளை தவறவிடுவோருக்கு இதுவரை விதிக்கப்பட்ட 300 ரூபா அபராதம் ஒரு இலட்சம் ரூபா வரை அதிகரிக்கப்படவுள்ளது.

இதுதவிர பல்வேறு குற்றச்செயல்கள் தொடர்பிலும் இதுவரை விதிக்கப்பட்டு வந்த அபராதத்தையும் அதிகரிப்பதற்கு இந்த சட்டமூலத்தில் யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. (ந-7)

# மக்களை வலுவூட்டவே பொருளாதாரத் திட்டங்கள்

### அகிலவிராஜ் காரியவசம்

பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் மக்களை வலுவூட்டவே அரசாங்கம் புதிய திட்டங்களை அறிமுகப்படுத்தி வருவதாக முன்னாள் அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் தெரிவித்துள்ளார்.

குருநாகல் சத்தியவாதி விளையாட்டரங்கில் நேற்று இடம்பெற்ற "விகமனிக ஹரசர" நிகழ்வில் உரையாற்றும் போதே அவர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இலங்கைக்காக வெளிநாடுகளில் பாடுபடுவோரின் குடும்பங்களைப் பலப்படுத்தும் நோக்கில் இலங்கை அரசாங்கம் இவ்வாறான திட்டங்களை செயற்படுத்துகிறது.

பொருளாதார நெருக்கடியான சூழ்நிலையில் உங்களை வலுவூட்ட அரசாங்கம் புதிய திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

இவற்றோடு 'அஸ்வெசும', 'உறுமய' போன்ற வேலைத்திட்டங்களின் கீழ் மக்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது.

இந்த நிவாரணங்களைக் கொண்டு வாழ்க்கையை வளப்படுத்திக் கொள்ளுமாறு மக்களை நாம் கேட்டுக்கொள்கிறோம் என்று அகிலவிராஜ் காரியவசம் மேலும் தெரிவித்தார். (ந-7)

# மாணிக்ககங்கையில் கதிர்காமக் கந்தனுக்கு இன்று தீர்த்தோற்சவம்

இலங்கையின் அதி தொன்மைவாய்ந்த முருகத்தலமான கதிர்காமம் முருகன் ஆலய வருடாந்த மகோற்சவத்தின் நிறைவாக இன்று காலை மாணிக்ககங்கையில் நீர் வெட்டு உற்சவம் இடம்பெறவுள்ளது.

திருப்புகழ் பாடல் பெற்ற கதிர்காமம் முருகன் ஆலயத்தின் தீர்த்தோற்சவத்தினை முன்னிட்டு புதிதாக நிர்மாணிக்கப்பட்ட தங்கப்பாதையானது நேற்று திறந்து வைக்கப்பட்டது.

தங்கப்பாதையின் வழியாக முத்துலிங்க சுவாமிகளால் எழுதப்பட்ட முருகப்பெருமானின் திருமந்திரப்பேளை யானை மீது எடுத்துவரப்பட்டு நீர்வெட்டு உற்சவம் இடம்பெறும் என ஆலயத்தின் பஸ்நாயக்க நிலமே அறிவித்துள்ளார். (ந-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கதிர்காமவெற்பில் உறைவோனே தினம் உன் திருவடி நினைப்பை அருள்வாயே



எதிரி லாத பத்தி ...... தனைமேவி
இனிய தாள்நினைப்பை ...... யிருபோதும்
இதய வாரி திக்கு ...... ளுறவாகி
எனது ளேசி றக்க ...... அருள்வாயே
கதிர காம வெற்பி ...... லுறைவோனே
கனக மேரு வொத்த ...... புயவீரா
மதுர வாணி யுற்ற ...... கழலோனே
வழுதி கூனி மிர்த்த ...... பெருமாளே.

அருணகிரிநாதர் அருளிய கதிர்காமம் திருப்புகழில்-4 ஆவது மொத்தம் 13 திருப்புகழ்

இணையில்லாத பத்தி நிலையை நாம் அடைந்து இனிய பெருமான் திருவடிகளின் நினைப்பை காலை, மாலை இரு போதும் எமது இதயம் என்னும் நெஞ்சகக் கடலில் உறவு பூண்டு அத்திருவடிகளே எமது உள்ளத்தே சிறந்து விளங்க அருள்வாயே! கதிர்காம மலையில் உறைபவனே பொன்மய மேரு மலைக்கு ஒப்பான புய வீரனே! உள்ளத்தில் இனிமை தரும் நாதம் பொருந்திய அருள்மிகு கழல்களை உடையவனே! எமது இனிய சரஸ்வதி தியாணித்து வணங்கும் கழலோனே! பாண்டியன் கூனை நிமிர்த்தி நின்ற சீர் நெடுமாறனாக்கிய பெருமானே-எமக்கும் தினம் தினம் இத்திருப்புகழ் ஓதி இனிய தாள் நினைப்பை அருள்வாயே! பேரொளி கடல்போல மோதிவரும் வடவையாறு (வட.ஐ-ஆறு) மாணிக்க கங்கை ஆறு சூழ்ந்து குளிர்ச்சி தரும் பழைய ஊராகிய சிவபூமியாகிய ஈழநாடாகிய இலங்கையில் வீற்றிருக்கும் கதிர்காமம் என்னும் பழைய ஊரில் வீற்றிருக்கும் இளையவனே! முருகனே!

ஓவியத்தில் வழிபடும் ஆலயம் உலகத்தில் கதிர்காமமும் ஒன்று. உள்ளே ஓர் பெட்டியில் இருப்பது அருள்மிகு சக்திவாய்ந்த யந்திரம் என கிருவானந்தவாரியார் சுவாமிகள். முன்னோர்கள் ஏழு பிறப்பை அல்லது எழும்பிறப்பை நீக்கும் ஏழு மலைக்கந்தன் என்பார்கள். முன்னொரு காலத்தில் ஓர் யோகி முருகனை ஒரு பெட்டியில் வைத்து பூசை செய்ததாகவும் ஏழுமலை முருகனை ஏழு திரைச் சீலையின் பின்னால் பாதுகாத்து மிகபக்தியுடன் வழிபடும் முருகன் அருணகிரியின் கதிர்காம திருப்புகழ் பாடப்பெற்ற அருள்மிகு முருகன், கந்தன்.

முதல் சூரபத்மனிடம் தூது சென்ற வீரவாகுத்தேவர் சென்ற போது செல்வச் சந்நிதியான் கால் பதித்த போது அங்கு மாலை நேரம் ஆனதினால் அங்கு வேல் பதித்ததாகவும் அங்கு இருந்து தான் முதல் முதல் அகத்திய முனிவர், போகர், சட்டை முனி, தன் மந்திர முனிவர், குலஸ்தியர், காக்கை முனிவர், கபில முனிவர், பதஞ்சலி முனிவர் மற்றும் பல முனிவர்கள் பாதயாத்திரையாக கதிரமலைக் கந்தனை வழிபட்டதாகவும் கூறப்படுகிறது. கதிர்காமத் தெய்வ முருகன் வள்ளியைக் கதிர்காமத்திலே களவு மணம் செய்து அங்கேயே தங்கி விட்டதாகவும் வேடுவர்களும் கர்ண பரம்பரையும் கூறிக்கொண்டு வருகின்றார்கள். சூரபத்மனை சங்காரம் செய்ய வந்த முருகன் இங்கு வசித்து வந்த வள்ளியை திருமணம் செய்ததாக கூறப்படுகிறது. இதற்குச் சான்றாக ஏழு மலைகளில் என்றும் வள்ளிமலை, வள்ளிக்குகை நாம் நேரில் பார்க்கலாம். வரலாற்றவரும் வேடுவர் இங்கு வாழ்ந்ததாகவும் சான்றுகள் இங்கு சொல்லுகின்ன. அந்தக் காலத்திலே வேடுவரின் குலதெய்வமாக சொல்லப்படுகின்றது. இங்கு பல யோகிகள் தவம் செய்த தலமெனவும் கல்யான யோகியின் சமாதியும், வேறு சமாதிகளும் இங்கு இருப்பதாக சொல்லப்படுகின்றது.

தமிழ்த் தெய்வம் முருகன் என அழைக்கப்படும் கந்தன் சாதி, மதம், மொழி வேறுபாடு இல்லாமல் மனப்பூர்வமாக அதியுயர் பக்தியுடன் வழிபடும் ஒரேயொரு ஆலயம் உலகத்திலே கதிர்காமக் கந்தன் தான்.

கதிர்காமக் கந்தனை நினைத்தாலே நம் துன்பம் விலகிவிடும். அறிவுபூர்வமாக பக்தியாகவும் அன்புடன் வழிபாடு செய்தால் தான் கதிர்காமமுருகனை தரிசிக்கலாம். முருகனது தலமான கதிர்காமம் கதிரமலைக்கந்தன் மண் வணங்கவும் மிதிக்கவும் முற்புண்ணியம் செய்திருக்க வேண்டும் என சேலம்ருக்மணி கூறியுள்ளார்.

நமது எல்லோரதும், உலக அனைவரும் வணக்கத்திற்குரிய யோகர் சுவாமிகள். நல்லூரில் 40 நாட்கள் தவம் புரிந்து எழுந்தவர், தன்னிலை மறந்து கிழக்கு நோக்கித் தன்னை மறந்த நிலையில் நடந்துபோய்க் கொண்டிருந்தவர், தன்னிலை உணர்ந்து பார்த்தபோது, ஆனையிறவில் நடந்ததை உணரும் போது தான் சுவாமிகள் கதிர்காமத்திற்கும் போவதை உணர்ந்தார்.

சுவாமிகள் கிழக்குக் கரையோரமாகப் பல நாட்கள் நடந்து கிடைத்த உணவு உண்டு, உகந்த இடத்தில் உறங்கி, கிழக்குக் கரையிலிருந்த பல ஆலயங்களைத் தரிசித்து, சித்தாண்டியில் வந்து சேர்ந்து மூன்று நாட்கள் தங்கி, அங்கிருந்து அருள் மிகு கதிர்காமப் பெருமான் கந்தன் சிந்தையுடன் ஏழுமலைக் கந்தனாம் கதிரமலைக்கும் போகும் வழியில் காத்தான்குடிப் பகுதி கடந்து பாதயாத்திரை தொடர்ந்து, பொத்துவிலைக் கடந்து காட்டுப் பாதைகள் கடந்து அங்கு ஆற்றுப் பெருக்கின் காரணமாக மணலில் ஓர் பள்ளமாகத் தோண்டி மூன்று நாட்கள் அன்னம், ஆகாரம் தண்ணியின்றி படுத்திருந்தார் அங்கு வந்த வேடர்கள் தங்களது பாசைகளில் அழைத்து எழுப்பி சுவாமிகளுக்கு ஏற்ற ஆகாரம் அன்போடு சமைத்து பரிமாறி கட்டு மரத்தில் ஏற்றி ஆற்றைக் கடந்து அக்கரையில் அன்போடு அழைத்து பாதுகாப்பாய் விட்டார்கள்.

சில நாட்களின் பின்பு கதிர்காமம் சென்று சுவாமிகள்யோகர் முருகன் தரிசனம் பெற்று சில காலம் தங்கும் போது இரவில் கதிரமலை உச்சியில் சென்று தியானத்தில் ஈடுபடுவார்.பகலில் கோயில் மண்டபத்தில் தியானத்தில் இருப்பார் நண்பகலில் மாணிக்க கங்கைக் கரையில் மணலிற் படுத்து சற்று ஓய்வெடுப்பார்.

நாமும் சித்தர்கள் காட்டிய வழியில் கதிர்காமம் சென்று வழிபடுவோம். அருணகிரி நாதரது திருப்புகழை ஓதுவோம். இன்றும் முன்னர் சித்தர்கள் காட்டிய வழியில் பாதயாத்திரை செய்பவர்கள் பல இடங்களில் இருந்தும் சந்நிதியான் ஆலயத்தில் இருந்தும் பாதயாத்திரை சென்று உகந்தை முருகனையும், கதிர்காமம் தரிசிப்பதையும் நாம் காணலாம்.

பாதயாத்திரிகளுக்கு சந்நிதியான் ஆச்சிரமம் செல்லும் பாதையிலும் கதிர்காமத்தில் சிவபூமி அன்னதான சபை யாத்திரி கர்கள் மடத்திலும், தெய்வானை அன்னதான சபை தெய்வானை மண்டபத்திலும் அன்புடன் தொண்டர்கள் அடையாக்கதவாக பல ஆண்டுகளாகக் கந்தர் அருளால் செய்வது கதிர்காமக்கந்தன் அருளாகும்.

கதிர்காமம் செல்பவர்கள் ஆசார சீலராகவும் திருப்புகழ் முருக நாமம் ஓதுவது மரபு.

முருகப் பெருமானிடம் பிரணவ மந்திர உபதேசம் பெற்ற அருணகிரிநாதரது திருவடிகளை வணங்கி திருப்புகழ் மற்றும் அருள்மிகு முருகன் நூல்களையும் ஓதி கதிர்காமக் கந்தன் திருவருளையும் பெறுவோம். நம் சந்ததிக்கு கதிர்காமம் திருக்கேதீச்சரம் திருக்கோணேஸ்வரம் உகந்தை முருகன். ஆலய வழிபாடுகளை காட்டி அவர்களும் நலம் பெற முருகன் திருவடிகளைப் பிரார்த்திப்போம். அன்புடன் அன்பே சிவம்

க.கு.க சிவபாலன்,
காரைநகர் ஈழத்துச் சிதம்பரம் மாணிக்கவாசகர் மடாலய போசகர்

(சி-835)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3175

Search for people, places and things

### லெனின்




போலி என்று தெரிஞ்சும் நாம் வாங்கிறோம் என்றால்



அது இதுவா மட்டும் தான் இருக்க முடியும்

### பிரியா

அதிகாரி: எனம்மா ஓபிஸுக்கு லேட்டு?
ஸ்டாப்: மாடிப் படியில இறங்கும் போது உருண்டு கீழே விழுந்திட்டேன் சார்
அதிகாரி: அப்ப சீக்கிரமாக வந்திருக்கனுமே

### கார்த்தி

தம்பி போனில் கேம் ஏத்த போனால் கோகிலா அக்கவுண்டு என்று கேட்குது




யோவ் பெருசு அது கோகிலா அக்கவுண்டு இல்லை கூகுள் அக்கவுண்

### சஞ்சய்



யாராச்சும் லவ்வு கிவ்வுன்னு வரட்டும் ஒரே போடு

### அனுபா

தேவைகள் இருந்தால்
திடீர் அக்கறை பாசம் வரும்
தேவைகள் முடிந்த பின்
நாம் யார் என்று கூட
தெரியாமல் போய்விடும்



### தீபன்

ஆடியில ஒன்று
வாங்கினால் இன்னொன்று
ப்ரீ என்று விளம்பரம்
ஓடுது
ஆடியில ஏன்
கல்யாணம் பண்ணக்கூடாது
என்று நம் முன்னோர்கள்
சொல்லி வைச்சிருக்கிறாங்கள்
என்று இப்ப புரியுது

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22ஆவது...

இது குறித்துக் கருத்துரைத்த அவர், எதிர்வரும் பாராளுமன்ற அமர்வின் நிகழ்ச்சி நிரலில் 22ஆவது அரசியலமைப்புத் திருத்தப் பிரேரணை உள்ளடக்கப்படவில்லை.

அடுத்த அமர்விற்கான நிகழ்ச்சி நிரலை நேற்று (நேற்று முன்தினம்) தயாரித்தேன். அதில் அந்த விடயம் இல்லை.

இந்தத் திருத்தம் பாராளுமன்றுக்கு சமர்ப்பிக்கப்பட்டாலும் அதனால் தேர்தல் பாதிக்கப்படாது. தேர்தல் பாதிக்கப்படும் என்பது பல்வேறு குழுக்கள் மற்றும் படிப்பறிவில்லாதவர்களால் வெளியிடப்படும் கருத்தாகும் என்றும் அவர் தெரிவித்தார். (ந-7)

## மானிப்பாய்...

மேலாக வீட்டாருடன் தொடர்பின்றிப் போயுள்ளார்.

அதனையடுத்து உறவினர்கள் அவர் பணியாற்றிய இடத்தில் விசாரித்தபோதும் எந்தத் தகவலும் கிடைக்காத நிலையில், மானிப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் நேற்றைய தினம் முறைப்பாடு செய்துள்ளனர்.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ந-7,33)

## செப்ரெம்பர்...

தேர்தல் ஆணைய வட்டாரங்கள் தெரிவித்துள்ளதாகக் குறித்த செய்தியில் தெரிவிக்கப்பட் டுள்ளது.

முன்னர் ஒக்ரோ பர் 5ஆம் திகதி முதல் 12ஆம் திகதிக்குள் ஜனாதிபதித் தேர்தல் நடைபெறலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள போதிலும் தேர்தல்கள் செப்ரெம்பர் மாதம் நடைபெறலாம் என தெரியவருவதாக சண்டேரைம்ஸ் தெரிவித்துள்ளது.

தேர்தல் திகதி அறிவிக்கப்பட்டு 16 முதல் 21நாட்களிற்குள் வேட்புமனுக்கள் பெறப்பட வேண்டும், 28 முதல் 42 நாட்களிற்குள் தேர்தல் நடைபெற வேண்டும் என்ற அடிப்படையில் தேர்தலை நடத்துவதற்கு தேர்தல் ஆணையகத்திற்கு 63 நாட்களை வழங்க முடியும் எனவும் அவ் ஊடகம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-7)

## களவாடப்பட்ட...

நேற்று மீட்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது,

ஆலயத்தின் பாதுகாப்புப் பெட்டகத்தினுள் வைக்கப்பட்டிருந்த 62 பவுண் நகை மற்றும் 8 இலட்சம் ரூபாய் பணம் என்பன காணாமல் போயிருந்தன.

இது தொடர்பாக ஊர்காவற்றுறைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், ஆலயப் பெட்டகம் உடைக்கப்படாது, போலிச் சாவிகளைகளைப் பயன்படுத்தி நகைகள், பணம் என்பன கொள்ளையிடப்பட்டுள்ளமையைப் பொலிஸார் கண்டறிந்தனர்.

அதனைத் தொடர்ந்து யாழ்ப்பாண மாவட்ட விசேட குற்றத்தடுப்புப் பிரிவுப் பொலிஸார் சந்தேகத்தின் அடிப்படையில் ஆலய மகோற்சவகாலத்தில் ஆலயத்தில் பணியாற்றிய 28 வயதான உதவியாளரைக் கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இதன்போது கைது செய்யப்பட்ட நபரிடம் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளில் 40 பவுண் நகைகள் மீட்கப்பட்டுள்ளதோடு ஏனைய நகைகள் வங்கியில் அடகு வைக்கப்பட்டுள்ளமையும் கண்டறியப்பட்டுள்ளது.

சந்தேகநபரை தொடர்ந்தும் பொலிஸார் தடுத்து வைத்து விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ஆலயத்தில் நகைகள், பணம் என்பன கொள்ளையடிக்கப்பட்டு நீண்ட காலமாகிவிட்டது. குற்றவாளிகளை உடனடியாகக் கைது செய்ய வேண்டும் என கடந்தவாரம் பிரதேச மக்கள் கவனயீர்ப்புப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில் சந்தேகநபர் கைது செய்யப்பட்டு, கோயில் நகைகளில் ஒரு தொகுதி மீட்கப்பட்டதையடுத்து பிரதேச மக்கள் வெடி கொளுத்தி தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினர். (ம-7,33)

## தமிழ்ப்...

கம் சித்தார்த்தன் தலைமையில் இக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

இதில் ரெலோ அமைப்பின் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன், தமிழ்த்தேசியக் கட்சியின் தலைவர் சட்டத்தரணி என்.சிறீகாந்தா, ஜனநாயகப் போராளிகள் கட்சியின் தலைவர் வேந்தன் மற்றும் துளசி ஆகியோர் பங்காளிக் கட்சிகள் சார்பில் கலந்து கொண்டனர். (ந-7)

## எமது தனித்து...

உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்.தந்தை செல்வா கலையரங்கத்தில் நேற்று (21) இடம்பெற்ற தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய மாநாட்டில் தலைமையேற்று உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழ்ப் பேசும் மக்கள் வேண்டுவது ஒற்றையாட்சி அரசியல் யாப்பின் கீழான 13ஆவது திருத்தச் சட்டத்தை அல்ல. எமக்கு சர்வதேசச் சட்டத்தின் கீழ் தரப்பட்டிருக்கும் சுயநிர்ணய உரிமையையே நாங்கள் கேட்கின்றோம். தமிழ்ப் பொது வேட்பாளர் இந்தக் கருத்தையே தமிழ்ப் பேசும் மக்களிடையே முன்னிறுத்த இருக்கின்றார்.

வடகிழக்கில் ஐக்கிய நாடுகள் சபை மக்கள் தீர்ப்பைக் கோரி தேர்தல் நடத்தட்டும். தமிழ்ப் பேசும் மக்கள் எதனைக் கோருகின்றார்களோ அதனை வழங்க ஐக்கிய நாடுகள் சபை முன் வரவேண்டும் என்ற கருத்தை சர்வதேசத்திடம் முன்னிலைப்படுத்தவே தமிழ் பொது வேட்பாளர் காத்து நிற்கின்றார்.

13ஐத் தருவதால் எமது மக்களுக்கு விடிவு காலம் ஏற்படாது. ஏற்கெனவே 13 இன் கீழுள்ள பல அதிகாரங்கள் மத்திய அரசாங்கத்தினால் எம்மிடம் இருந்து பறித்தெடுக்கப்பட்டுள்ளன.

இப்போது இருப்பது வெறும் கோதே! மேல் தோலே! அதிலும், தரப்பட்டிருக்கும் மிக சொற்ப பொலிஸ் அதிகாரங்களைக் கூட வழங்க முடியாது என்று ஒரு வேட்பாளர் கூறியுள்ளார்.

நாம் ஜனாதிபதித் தேர்தலில் வெல்ல வேண்டும் என்று போட்டியிடவில்லை. எமது தனித்துவத்தை உலகறியச் செய்யவும் எமது ஜனநாயக உரித்தை ஐக்கிய நாடுகள் மூலம் பரீட்சித்துப் பார்க்க ஒரு வேண்டுதல் மேடையாக இத்தேர்தலைப் பாவிக்கவுமே நாம் ஒரு தமிழ்ப் பொது வேட்பாளரை முன்னிறுத்த உத்தேசித்துள்ளோம்.

நாங்கள் பொது வேட்பாளரை நிறுத்த இருக்கின்றோம் என்றவுடன் மூன்று முக்கிய சிங்கள வேட்பாளர்களும் தமது சேனை பரிவாரங்களுடனும் படைகளுடனும் இங்கு வந்து 13ஐத் தருகின்றோம் என்று சொல்லிச் சென்றுள்ளார்கள்" என சி.வி.விக்னேஸ்வரன் மேலும் தெரிவித்தார். (ந-7)

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378,
076 097 3127

மஹஜன சம்பத
திகதி 2024.07.21
சீட்டிழுப்பு இலக்கம் 5541
Q 5 0 5 6 1 0
அத சம்பத Q 5 6 1 0
சீட்டிழுப்பு இலக்கம் 116
National Lotteries Board

தன நிதானய
திகதி - 2024.07.21
சீட்டிழுப்பு இலக்கம் - 1571
S 01 18 25 44 S
Double Chance 75565

மெகா பவர்
திகதி 21/07/2024
சீட்டிழுப்பு இலக்கம் 1889
A 25 23 27 39 58
63407

லக்கி 7 VIP
திகதி 2024.07.21
சீட்டிழுப்பு இலக்கம் 367
Y 1 0 5 2 7 8 Y

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3783
சீட்டிழுப்பு திகதி 21.07.2024
C 05 16 25 37
C 84939

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2024.07.21
சீட்டிழுப்பு இலக்கம் 0850
மேடம் 17 25 38 44 மேடம்
67330 30

உத்தியோகபூர்வ முடிவுகள்
21.07.2024 வெற்றி வாரம் 249 வர்ணம் பழுப்பு
W 9 5 0 4 5 8
50122
ரூ.22,031,304.00
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2515 வர்ணம் ஆரஞ்சு நிறம்
சீட்டிழுப்பு திகதி 21.07.2024 தினம் ஞாயிறு
22 28 49 51 S
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.100,020,612,80

சனிதா
திகதி 2024.07.21 வெற்றி வாரம் 4676
49 67 69 70 D
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.65,841,351.20
83102

சசிரி
505
2024.07.21
கபிலம்
09 30 41
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,285,560/-

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4227 வர்ணம் ஊதா
சீட்டிழுப்பு திகதி 2024.07.21 தினம் ஞாயிற்றுக்கிழமை
18 19 41 49 கன்னி
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 6,400,387.20
926517

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 34 07 15 30 55
1691
மஞ்சள்
21.07.2024 ஞாயிறு
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 534,366,073.40

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம் : 2341
சீட்டிழுப்பு திகதி : 2024.07.21
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,237,728.80
05 16 22 66 C
494984

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனாதிபதி வேட்பாளர்களுக்கு

# விசேட பாதுகாப்பு

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடவிருக்கும் வேட்பாளர்களின் தனிப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்பார்வையிட பிரதிப் பொலிஸ்மா அதிபர் (டிஐஜி) ஒருவரை நியமித்துள்ளதாக பொலிஸ் மா அதிபர் (ஐஜிபி) தேசபந்து தென்னகோன் நேற்று தெரிவித்துள்ளார்.

இது குறித்து மேலும் குறிப்பிட்ட அவர்,

பொதுப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளருடன் கடந்த வாரம் ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களுக்கும், முன்னாள் ஜனாதிபதிகளுக்கும் பாதுகாப்பு வழங்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

வேட்பாளர்கள் தங்கள் வேட்புமனுக்கள் அல்லது வேட்புமனுக்கள் தொடர்பான தகுந்த ஆவணங்களை தேசிய தேர்தல் ஆணையத்திடம் தாக்கல் செய்த பிறகு அவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும்.

ஜனாதிபதி வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கான அமைச்சரவை பத்திரத்தை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கடந்த புதன்கிழமை சமர்ப்பித்துள்ளார்.

சமீபத்தில் அமெரிக்காவின் பென்சில்வேனியாவில் நடந்த பிரச்சார பேரணியின் போது முன்னாள் அமெரிக்க அதிபரும் குடியரசுக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளருமான டொனால்ட் டிரம்ப் மீது மேற்கொள்ளப்பட்ட படுகொலை முயற்சியைத் தொடர்ந்து.

வேட்பாளர்கள் மற்றும் முன்னாள் ஜனாதிபதிகளுக்கு எதிரான அச்சுறுத்தல்களை மதிப்பிடுவதற்கான குழுவொன்றை அமைக்க ஜனாதிபதி விக்கிரமசிங்க முன்மொழிந்துள்ளார் என்றார். (ந-7)

## தமிழர்களின்...

யாழ்ப்பாணம் தந்தை செல்வா கலையரங்கில் நேற்று நடைபெற்ற தமிழ் மக்கள் கூட்டணியின் தேசிய மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொள்கை ரீதியாக ஒன்றுபட்டுச் செயற்படுகின்ற ஏனைய தமிழ் அரசியல் கட்சிகளையும் அரவணைத்தவாறு புலம்பெயர் தேசக் கட்டமைப்புகளுடனும் இணைந்த வகையில், தமிழர்களின் தாகம் வெல்ல உழைப்பதே இங்குள்ள ஒவ்வொருவரினதும் முதன்மைக் கடமையாகும்.

கடந்த எட்டுத் தசாப்தங்களுக்கு மேலாக ஈழத்தமிழர்களின் சுதந்திரத்துக்காக, அவர்களின் இறையாண்மையை நிலை நிறுத்துவதற்காக, சிங்கள பௌத்த ஒடுக்குமுறை ஆட்சியாளர்களுக்கு எதிராக, இரத்தமும் சதையுமாக நடைபெற்று வருகின்ற போராட்ட வலியின் நீட்சியில் உருவான, ஈழத்தமிழர்களின் சுதந்திரத்திற்கான அரசியல் இயக்கங்களில் ஒன்றாகத் தன்னைக் கட்டமைத்துக் கொண்டுள்ள 'தமிழ் மக்கள் கூட்டணியின்' முதலாவது தேசிய மாநாட்டில் உரையாற்றக் கிடைத்த இந்த சந்தர்ப்பத்தை, காலத் தேவை கருதிய வரலாற்றுச் சந்தர்ப்பங்களில் ஒன்றாகவே நான் பார்க்கிறேன்.

இன்று தமிழ்த் தேசியம் சார்ந்த கட்சிகள் மக்களிடமிருந்து அந்நியப்பட்டு நிற்கின்றன. இங்கு தான் உரிமை அரசியலை சலுகை அரசியல் வெல்கிறது. இந்த நிலைமையைச் சீர்செய்யத் தமிழ்த் தேசிய அரசியல் மறுசீரமைப்பு முயற்சிகளை விரைவுபடுத்த வேண்டும்.

எமது சிந்தனைகளை மீள் வடிவமைப்புக்கு கொண்டுவருவதன் மூலம் காலத்தின் வேகத்துடனும், பூகோள மாற்றங்களுடனும் எமது மக்களின் அபிலாசைத் தளங்களிலிருந்து தடம்புரளாது பயணிக்க வேண்டியுள்ளது. இந்த நெருக்கடிமிக்க சூழலை எளிதாகக் கையாள்வதாயின், தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்களும், பிரதிநிதிகளும், புலத்திலிருந்தவாறு இனத்தின் விடுதலைக்காக அர்ப்பணிப்புடன் செயற்பட்டு வரும் உறவுகளும் ஒருங்குசேர தம் அரசியற் பயணத்தை முன்கொண்டு செல்வதற்கான எதிர்கால வழி வரைபடம் ஒன்றையும் அதுசார் கொள்கை வகுப்புகளையும் உருவாக்க வேண்டும்.

அத்தகையதோர் தளத்தில் நின்று எல்லாத் தரப்பினரையும் இணைத்துச் செயலாற்றுவதன் தேவையுணர்ந்த ஒருவனாக, அந்தத் தளத்தின் இணைப்புப்பாலமாக இருந்து என் எல்லா இயலுமைகளைக் கடந்தும் ஈழத் தமிழினத்தின் அரசியல் வேட்கையைச் சுமந்த பயணத்தின் பங்குதாரராக செயலாற்றுவதில் எனக்கிருக்கும் விருப்பையும், கடமையையும் நான் இவ்விடத்தில் வெளிப்படையாகவே பதிவு செய்கிறேன் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் மேலும் தெரிவித்தார். (ந-7)


UNITED NATURE INTERNATIONAL PEACE
(Unity of Nations)

Our organization is registered in United Nations Partnership platform (UNDESA) # 234059, United Nations Global Compact # 150523, United Nations Parner Portal (IOM, UN Secretarial, UN Women, FAO, UNDP Crisis Bureau, UNFPA, UNHCR, UNICEF, UNOPS, WFP, WHO) # 30088, UNV -2394343, English Master Institute - EMIANuN 00031. Also has Membership in United People Global, Agaram Foundation of International and Sri Lanka Book of World Record. It also Has accreditation with various international organizations and universities.



உலகளாவிய தலைமைத்துவ மாநாடு
மற்றும் விருது விழா





கல்வி, கலாசாரம், மருத்துவம், சமூக சேவைகள், மற்றும் சில பகுதிகளில் சிறந்த சேவைகளை உன்னதமாக வழங்கியவர்களுக்கு கௌரவ கலாநிதி விருது மற்றும் சர்வதேச சமூக விருது மற்றும் சிறந்ந மனிதாபிமான விருது வழங்கி கௌரவிக்க ஐக்கிய இயற்கை சர்வதேச அமைப்பு தீர்மானித்துள்ளது.

உலகளாவிய தலைமைத்துவ கருத்தரங்கு 2024




1. ஆசிரியர் மற்றும் கல்வி
2. கலை மற்றும் கலாசாரம்
3. நிகழ்ச்சி மற்றும் அமைப்புகள்
4. வைத்தியம் மற்றும் வைத்தியர்கள்
5. என் ஜி ஓ மற்றும் சமூக சேவைகள்
6. அரசியல் மற்றும் ஊடகம்

GLS 2024 - விருதுகள்

1. சர்வதேச சிறந்த சாதனையாளர் விருது
2. சர்வதேச இளம் சாதனையாளர் விருது
3. சர்வதேச அதீத திறமையாளர் விருது
4. சர்வதேச சிறந்த தலைமைத்துவ விருது
5. பொதுசேவை நாயகன் விருது
6. சர்வதேச சிறந்த கலைஞர் விருது
7. சிறந்த நல்லாசிரியர் விருது
8. சிறந்த பாடகர் விருது
9. சிறந்த பத்திரிகையாளர் விருது
10. சிறந்த வணிக நிபுணர் விருது
11. சிறந்த அழகுக்கலை நிபுணர் விருது
12. சர்வதேச சிறந்த சமூக ஆர்வலர் விருது
13. சர்வதேச மனிதாபிமான சிறப்பு விருது
14. சர்வதேச மனித உரிமை ஆர்வலர்கள் விருது
15. கௌரவ கலாநிதி விருது (EMI-Nigeria & BUCAS, University-Bethlehem)
16. கௌரவ பேராசிரியர் விருது (HMI University - USA / malawi)

காலம் : 18 ஆவணி 2024 நேரம் : 10:45 காலை
இடம் : கற்பக ராஜேஸ்வரி மண்டபம். உரும்பிராய், யாழ்ப்பாணம்.

(C-836)

UNITED NATURE INTERNATIONAL PEACE (Unity of Nations)

விருது விழாவில் கலந்துகொள்ள விரும்புவோர் தொடர்புகொண்டு பதிவு செய்யவும்

+94 77 720 4554
+94 77 100 0031

uniphqun@gmail.com
unipun07@gmail.com

எமது UNIPUN கிளைகள் செயற்படும் நாடுகள்

BRAINAE University
UNITED PEOPLE GLOBAL

வெளிநாடுகளுக்கான துரித பொதிகள்
சகல நாடுகளுக்கும் விசேட விலைக் கழிவு
11 Kg மேற்பட்ட பொதிகளுக்கு

| | | | |
|---|---|---|---|
| UK | - 1300/= | French | - 1990/= |
| Canada | - 2400/= | Germany | - 1990/= |
| Australia | - 2300/= | USA | - 2400/= |

மற்ற நாடுகளுக்கும் விசேட சலுகை (179)
திருமுருகன் பொதிகள் சேவை
321, K.K.S Road, Jaffna. | 208, Galle Road, colombo-6.
077 755 4528

Care Giver - பராமரிப்பாளர்
கனடா, அமெரிக்கா, ஜேர்மனி
போன்ற நாடுகளில் வேலை வாய்ப்பினை பெறக்கூடிய கற்கை நெறி - 1 Year Diploma
கனடாவில் புதிதாக உள்வாங்கப்படவுள்ள நிரந்தரகுடியுரிமையுடனான 15'000 Care Giver வாய்ப்புக்களுக்கான சர்வதேச தரமிக்க Diploma சான்றிதழுடன் Care Giver கற்கை நெறி மற்றும் Immigration Services - வீசா சேவைகள்.
(இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்)
(C-0837)
CIMS College
49A, Chapel Street, Jaffna.
College Of International Migration Skills
0777 068 777 / 077 7719 322

அனைத்து நாடுகளுக்குமான
விமான பயணச்சீட்டுக்கள்
குறைந்த விலையில்
•Air Ticket Date Change •Travel Insurance
•Online Visa Appoinments •Travel Itinerary
•Sri Lanka Visa Extension
•All Country Visa Services
(C-0837)
உங்கள் அருகாமையில் எமது நேரடி கிளைகள்
கொழும்பு | மட்டக்களப்பு | திருகோணமலை | கிளிநொச்சி
புதுக்குடியிருப்பு | கொடிகாமம் | சாவகச்சேரி | புத்தூர்
யாழ்ப்பாணம் | நாச்சிமார் கோவிலடி | பண்டத்தரிப்பு
சுன்னாகம் | மானிப்பாய் | சங்கானை | கோப்பாய்
நெல்லியடி | பருத்தித்துறை | வல்வெட்டித்துறை
V2 TRAVELS 0768226241

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை வீசா நீடிப்பு
(C-0837)

காணி விற்பனைக்கு
ஊரெழு மேற்கில் 8 பரப்புக் காணி விற்பனைக்கு 2 பரப்பு, 3 பரப்பாக பிரித்து தரப்படும். ஊரெழு பலாலி றோட்டில் இருந்து 300m - 400m தூரம், நல்ல சூழல். விலை நேரில் பேசித் தீர்மானிக்கலாம்.
(1526)
077 617 2892

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 22.07.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.